உ

கணபதி துணை.

347

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீமெய்கண்டதேசிகன் திருவடிவாழ்க.

ஸ்ரீமத் அருணந்திசிவாசாரியசுவாமிகள் அருளிய

# இருபாவிருபஃது.

இது

திருநெல்வேலிப்பேட்டை
ஸ்ரீ மெய்கண்டான் நிலய தரும கருத்தரும்,
திருவருட்பயன், கொடிக்கவி, போற்றிப் பஃறொடை, வினா வெண்பா
என்னும் நூல்களின் உரையாசிரியரும்,
ஆசிரியபதவியி லிருப்பவருமாகிய

## ஆ. ஈசுரமூர்த்தி பிள்ளை அவர்கள்

செய்த

பதவுரை கருத்துரைகள் சேர்ந்தது.

பலவான்குடி 'சிவநேசன்' அச்சியந்திரசாலை.

T000347
Sarasvati Mahal Library. Thanjavur

...வருஷ ஆனிமீ

1934

N. B. உரைப்பகுதியின் பதிப்புரிமை உரையாசிரியருக்கே யுள்ளது.

S. Meenakshisundaram,
KUMARA VILAS,
27 MAY 1940

உ

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

# முன்னுரை.

வைதிக சைவத்தின் ஞானபாதத்தைத் தருக்க முறையில் நிர்ணயித்துச் செல்லுந் தமிழ் நூல்கள் பதினான்கு. அவை சித்தாந்த சாத்திர மெனவும், மெய்கண்டசாத்திர மெனவும் படும். ஸ்ரீமெய்கண்டார் முதலியோர் அவையிற்றின் ஆசிரியராவர். இந்த இருபாவிருபஃது அப் பதினான்கனுள் ஒன்று. இதனை யியற்றிய மகந்நியர் ஸ்ரீமத் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள். ஸ்ரீமத் அருணந்தி சிவாசாரிய சுவாமிகள் தம் ஞான தேசிக ரத்னமாகிய ஸ்ரீ மந் மெய்கண்ட சிவாசாரிய சுவாமிகளிடம் வைதிக சைவ ஞான பாதத்தின் பல நுணுக்கங்களைச் சங்கைவடிவிற் பாடம் ஒப்பித்திருக்கின்றார்கள். அச் சங்கைகளின் தொகுதிதான் இந்நூல்.

இக்காலை ஒருவன் சைவ சித்தாந்தக் கருத்துக்களை உரைச்செய்யுளிலோ பாச்செய்யுளிலோ தனிநூல் செய்து உலகுக்கு உபகரிக்கலாம். ஆனால், எத்தனை தொன்னூல்கள் இக்காலத்தார்க்குப் பொருள் விளங்காமற் கிடக்கின்றன? அதனால், அவர்கள் அந்நூல்களைப் பயிலாமலும், அவற்றின் ஆசிரியர்களைக் கௌரவியாமலும் புறமாகின்றார்கள். ஆகையால், அவன் பழைய பிரமாண நூல்களுக்குத் தெளிவான உரைகளை யெழுதி வெளியிடின், தன் கருத்து நிரம்புவதோடு அந்நூல்களையும் நூலாசிரியர்களையும் பெரும்பாலார்க்கு அறிமுகப்படுத்திய புண்ணியத்தையும் பெறுவான். நான் சித்தாந்த நூல்களுக்கு உரையெழுத நேர்ந்த காரணங்களுள் இதுவும் ஒன்று. ஆகையால், நான் இந்தக் கிரந்தத்துக்கும் புத்துரை செய்யலானேன். இது, பதவுரை பொழிப்புரை கருத்துரை யாகிய மூன்றும் அடங்கியது. இந்நூலுக்குப் பிறர் செய்த உரைகளும் உண்டு. என்னுரையும் நூற்பொருளை மாணவர்மனதில் எளிதிற் பதியவைக்கும் பான்மை யுடையதென்று வைதிக சைவ சீலர்கள் துணிவார்களாயின், அவர்களுக்கு என்னையும் இந்நல்லுழைப்பில் மேலுமேலும் உத்ஸாகப்படுத்தவேண்டுவது கடனாகும்.

நான் இதுவரைத் திருவருட்பயன், கொடிக்கவி, போற்றிப்பஃறொடை, வினாவெண்பா என்னும் நான்கு நூல்களுக்கும் புத்துரை யியற்றி அதைப் புத்தகமாக்கி வெளியிட்டுள்ளேன். வைதிகசைவ சாத்திரபண்டிதர் பலர் அவ்வுரைகளை ஊன்றிப்படித்து மகிழ்ச்சிமேலீட்டுப் பல படியாலும் புகழ்ந்தெழுதி எனக்கு விடுத்த கடிதங்கள் அநேகம். சென்னை வேதாகமோக்த சைவ சித்தாந்தசபைத் தலைவர்

ஸ்ரீ மாந் - நல். கண்ணப்பமுதலியாரவர்கள் 'சித்தாந்த சாத்திரங்கட்குத் தங்களுடைய உரைகள் மேலானவை யென்று மதிக்கிறேன். இம்மாதிரியாகவே யேனைய நூல்கட்கும் தங்களுடைய உரை வெளிவருமாறுமெய்கண்டதேவர் மெல்லடிவாழ்த்துகின்றேன்.' என்றும், '...கண்டு அளவிலா வானந்த வாரிதியிற் றிளைத்தேன். இப்புத்தகங்கட்கு அநேக உரைக ளிருப்பினும், இவ்வளவு தெளிவாகவும் சுலபமாகவும் தெரிந்துகொள்ளும்படியான வழியி னமைத்திருப்பதைக் காணுந்தோறும் அளவிலா மகிழ்ச்சி யடைகின்றேன். சித்தாந்த சாத்திரங்கள் முழுமைக்கும் இவ்வளவு தெளிவான நடையில் உரை வெளிவந்திருக்குமாயிற் பலருக்கு முபயோகப்பட்டிருக்கும். மெய்கண்ட சிவத்தின் முழுமுதற் பெருங்கருணை முன்னின் றருள்புரியுமாறு வாழ்த்துகிறேன்.' என்றும் எனக்கு எழுதியுள்ளார்கள். அவர்கள்தானே இவ் விருபா விருபஃதுப் புத்துரையைப்பற்றித் 'தாங்கள் விடுத்த இருபா விருபஃதுப் பதவுரையால் என்னுடைய சந்தேகவிபரீதங்கள் தெளிவுபெற்றன.' என்றும் வரைந்துள்ளார்கள். இங்ஙனமாய மற்றைப் பெரியார் கடிதங்களையும் இதில் காட்டினால் விரியும். என்னை நானே புகழ்ந்துகொண்ட தோஷமும் எனக்குப் பலிக்கும். ஆகலின், அவசியம் நேர்ந்த சமயத்துக்கு அவ்விஷயங்களை வைத்துக்கொண்டு, இவ்வுரையை இங்குச் சுருக்குகின்றேன். அந் நான்கு உரைகளும் புத்தகமாதற்குச் சிலசிவபுண்ணியசீலர்கள் பணவுதவி செய்தார்கள். அப்பால் எனது மற்ற நாலுரைகளை யச்சிட எந்தத் தருமவான்களும் கிடைத்திலர். முன் உதவிய செல்வர்களிடம்போய் அடிக்கடி உதவிகேட்கவோ எனக்கிஷ்டங்கிடையாது. கடைசியாகப் பலவான்குடிச் 'சிவநேசன்' அதிபர் ஸ்ரீமாந் ராம. கு. ராம. இராமசாமிச் செட்டியார் அவர்களுக்கு 'இவ் விருபாவிருபஃதுப் புத்துரையைச் சிவநேசன் அநுபந்தமாக அச்சிட்டு உதவலாமா?' என்று நான் விண்ணப்பமொன் றனுப்பினேன். எப்போதும் ஏழைபங்காளன் இன்னருள் வசத்தில் நின்று வைதிக சைவத்துக்குத் தொண்டாற்றி வரும் அப் பெரியார், என் வேண்டுகோட்கு உடனே இணங்கினார்கள். வெகு சீக்கிரத்தில் எனது புத்துரை அவர்கள் முயற்சியால் அழகிய புத்தகமாயிற்று. ஸ்ரீமாந் செட்டியாரவர்களுக்கு நான் என் மனநிறைந்த ஆர்வத்தோடு வந்தனத்தைச் செலுத்திக்கொள்ளுகிறேன்.

பேட்டை,<br>பவ-ஆவணி-௧௨ }

ஆ. ஈசுரமூர்த்திப் பிள்ளை,<br>உரையாசிரியன்.

உ

திருச்சிற்றம்பலம்

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

# இருபா விருபஃது.

## (பதவுரை)

1. கண்ணுதலுங் கண்டக் கறையுங் கரந்தருளி
மண்ணிடையின் மாக்கண் மலமகற்றும்—வெண்ணெய்நல்லூர்
மெய்கண்டா னென்றொருகான் மேவுவரான் வேறின்மை
கைகண்டா ருள்ளத்தின் கண்.

வெண்ணெய் நல்லூர்—திருவெண்ணெய் நல்லூரிலே
மெய்கண்டான்—(ஜகதாசாரியராக வந்த) ஸ்ரீமெய்கண்டதேவர்
நுதற்கண்ணும்—(தமது)நெற்றியிலுள்ள கண்ணையும்
கண்டக்கறையும்—கழுத்திலுள்ள(ஆலகாலவிடக்)கறுப்பையும்
கரந்தருளி—மறைத்து
மண்ணிடையின்—உலகத்திலுள்ள
மாக்கள்—ஆன்மாக்களின்
மலம்அகற்றும் என்று—அஞ்ஞானத்தை நீக்கியருளுவாரென்று
ஒருகால்—ஒருதரமாயினும் (மக்கள்)
மேவுவர்—சிந்திப்பார்கள்.
(ஆதலால் அவர்கள்)
உள்ளத்தின்கண்—(தமது)அறிவிலே
வேறு இன்மை—(அப்பெருமானுர்) பிரியாது விளங்குவதை
கைகண்டார்—புலப்படக்காண்பார்கள்.

சிவபிரானே ஆசாரியத் திருமேனி தாங்கிவந்து ஆன்மாக்களுக் கநுக்கிரகிக்கின்ரு னென்பது சைவசித்தாந்த வுண்மை. ஆகலின் ஈண்டுக் கூறிய ஆசாரிய வணக்கஞ் சிவவணக்கமே யாயிற்று.

---

2. கண்ணகன் ஞாலத்துக் கதிரவன் ருனென
வெண்ணெய்த் தோன்றிய மெய்கண்ட தேவ
காரா கிருகக் கலியாழ் வேனைநின்
பேரா வின்பத் திருத்திய பெரும
வினவ லானு துடையே னெனதுள

நீங்கா நிலைமை யூங்கு முளையா
லறிவின் மைமலம் பிரிவின் மையெனி
னொரலினை யுணர்த்தும் விராய்நின் றனையேற்
றிப்பிய மந்தோ பொய்ப்பகை யாகாய்
சுத்த னமலன் சோதி நாயகன்
முத்தன் பரம்பர னெனும்பெயர் முடியா
வேறுநின் றுணர்த்தின் வியாபக மின்றாய்ப்
பேறு மின்று மெனக்கெம் பெரும
விருநிலந் தீநீ ரியமானன் காலெனும்
பெருநிலைத் தாண்டவம் பெருமாற் கிலாதலின்
வேறோ வுடனோ விளம்பல் வேண்டும்
சிறி யருளல் சிறுமை யுடைத்தா
லறியாது கூறின னபக்குவ பக்குவக்
குறிபார்த் தருளினங் குருமுத லாயெனி
னபக்குவ மருளினு மறியேன் மிகத்தகு
பக்குவம் வேண்டிற் பயனிலை நின்றாற்
பக்குவ மதனாற் பயனீ வரினே
நின்னைப் பருவ நிகழ்த்தா தன்றே
தன்னைப் பாரிலி யென்பதுந் தகுமே
மும்மலஞ் சடமணு மூப்பிள மையினீ
நின்மலன் பருவ நிகழ்த்திய தியார்க்கோ
வுணர்வெழு நீக்கத்தை யோதிய தெனினே
யிணையிலி யாயினை யென்பதை யறியேன்
யானே நீக்கினுந் தானே நீங்கினுங்
கோனே வேண்டா கூறல் வேண்டும்
காண்பா ரியார்கொல் காட்டாக் காலெனு
மாண்புரை யுணர்ந்திலை மன்ற பாண்டியன்
கேட்பக் கிளக்குமெய்ஞ் ஞானத்தி
னட்பா லவர்க்கரு ளென்பதை யறியே.

கண் அகல் ஞாலத்து—இடமகன்ற வுலகத்தில்
கதிரவன்—(இருளை நீக்குஞ்) சூரியன்(போன்று)
தான் என— (உயிர்களின் அஞ்ஞானத்தை நீக்குபவர்) இவரே யென்று (உலகந் துதிக்குமாறு)
வெண்ணைத் தோன்றிய—திருவெண்ணெய் நல்லூரி லவதரித்த

மெய்கண்ட தேவ—மெய்கண்டதேவரே!
காராகிருகக்கலி—(பிறப்பு இறப்பென்னுஞ்) சிறைத்துன்பத்தில்
ஆழ்வேனை—அகப்பட்டுக்கிடந்த என்னை (யெடுத்து)
நின்—உமது
பேரா இன்பத்து—அழியாத பேரின்பத்தில்
இருத்தியபெரும—வைத்தாண்ட பெருமானே!
எம்பெரும—உயிர்களுக்கெல்லாந் தலைவரே!
வினவல்—(நான் சில சந்தேகங்கள்தீர) வினவுதலை
ஆனது உடையேன்—அமையாமல் எப்போதும்உடையவனு யிருக் [கிறேன்.
சிறுமை உடைத்தால்—(என்னறிவு) சிறுமையை யுடைத்தாகலான்
அறியாது—(அவைகளுக்கு விடை) தெரியமாட்டாமல்
கூறினன்—(உம்மிடங்) கேட்பேன்:
சீறியருளல்— (நீர் என்னைக்) கோபியாதிருப்பீராக.
எனது உளம்— (நீர்) எனது உயிரினின்றும்
ஊங்கும்—அநாதி தொட்டே
நீங்காநிலைமை—பிரியாத நிலைமையில்
உளை—இருக்கின்றீர்.
(அப்படி யிருந்தும் எனக்கு)
அறிவு இன்மை—அஞ்ஞானம் (உண்டாவதற்கு)
மலம்—ஆணவம்
பிரிவு இன்மை— (என்னைவிட்டு) நீங்காமையே
எனின்— (காரணம்) என்பீராயின்,
(அஃது)
ஓராலினை—(நீர் என்னைவிட்டுப்)பிரிந்திருக்கின்றீர்(என்பதையே)
உணர்த்தும்—காட்டும்.
(அல்லது)
விராய் நின்றனையேல்— (நீரும் ஆணவத்தோடு) கூடி(என்னிடத் [தில்) இருப்பீராயின்
திப்பியம்—(உமது) தெய்வத் தன்மை
அந்தோ—அம்மம்ம! சந்தேகத்துக்கிடமானதே.
(ஏனெனில் நீர்)
பொய்ப்பகை ஆகாய்—ஆணவத்தை நீக்கும் விரோதியாக மாட் [டீர் (என்க).
(அன்றியும் உமக்கு)
சுத்தன்—தூயவன்,
அமலன்—மலமில்லாதவன்,

சோதிநாயகன்—ஞானத்தலைவன்,
முத்தன்—ஆனந்தமயன்,
பரம்பரன்—மிகவுமேலானவன்
எனும்பெயர்—என்ற திவ்வியநாமங்களும்
முடியா—பொருந்தா.

(இனி நீர்)

வேறு நின்று உணர்த்தின்— (என்னைவிட்டு) விலகியிருந்து [(எனக்கு) உணர்த்துவீராயின்
வியாபகம் இன்றாய்—(உமக்குச்) சர்வ வியாபகமு மில்லையாகி
எனக்குப் பேறும் இன்றாம்—எனக்கு முத்தியுமில்லையாகும்.

(தவிர)

பெருமாற்கு—உமக்கு
இரு நிலம் தீ நீர் இயமானன் கால் எனும் } —ஐம்பெரும் பூதங்களெனப்படும்
பெருநிலைத்தாண்டவம்—அண்டங்களை யியக்கும் (பஞ்சகிருத்திய மாகிய) திருக்கூத்தும்
இல்—இல்லையாகும்.
ஆதலின்—ஆகையால்
வேறோ—(நீர் என்னைவிட்டு) விலகி யிருக்கின்றீரா? (அல்லது)
உடனோ—(என்னோடு) கலந்திருக்கின்றீரா? (என்பதை)
விளம்பல் வேண்டும்—(எனக்குச்) சொல்லியருளல்வேண்டும்.

(இனி, நீர் ஞானத்தை)

குருமுதல் ஆய்—எனக்காசாரியராய் வெளிப்பட்டு
அபக்குவ பக்குவக்குறி—(எனது) அபக்குவ பக்குவத் தன்மைகளை
பார்த்து—ஆராய்ந்து பார்த்து
அருளினம் எனின்—உணர்த்தினோ மென்பீராயின்
அபக்குவம்—(எனது) அபக்குவத்தில்
அருளினும்—(நீர் எப்படி) உணர்த்தினும்
அறியேன்—(நான்) உணரமாட்டேன்.

(நீர் உணர்த்தியதை யுணர எனக்கு)

மிகத் தகு பக்குவம்—மேலான பக்குவம்
வேண்டில்—வேண்டுமானால்
நின்னால் பயன் இலை—நீர் உணர்த்துவதால் (எனக்கு) ஒரு பயனு [மில்லை.

(ஆனால்)

பக்குவமதனால் பயன்—(எனது) பக்குவத்தின் பயனாவது

நீ வரின்—நீர் (ஆசாரியமூர்த்தியாய்) வெளிப்படுவதேயாம் (என்
[பீராயின்)
பருவம்—பக்குவம் (சடமாகலின் வினைமுதலாக நின்று)
நின்னை—உம்மை
நிகழ்த்தாது—வெளிப்படுத்தாது.

(அன்றியும்)

அன்றோ—ஐயோ!
தன் ஒப்பார் இலி என்பதும்—நீர் நிகரில்லாதவரென்று (ஆகமங்
[கள்) சொல்லுவதும்
தருமே—பொருந்துமா?

(நிற்க)

மும்மலம்—மூன்று மலங்களும்
சடம்—சடப்பொருள்கள்.
அணு—உயிர்கள்
மூப்பு இளமை இல்—வளர்தல் தேய்தல்களை யில்லாதவைகள்.
நீ—நீர்
நின்மலன்—மலமில்லாதவர்.

(அங்ஙனமாக)

யார்க்கு—யாருக்கு
பருவம்—பக்குவம் (வேண்டுமென்று)
நிகழ்த்தியது— (நீர்) சொன்னீர்?
உணர்வு எழு நீக்கத்தை— (எனது) அறிவு விளக்கத்துக்கு வேண்
டப்படும் (மல) நீக்கத்தையே
ஓதியது எனின்—(பக்குவமென்று) சொல்லுவீராயின்
இணை இலி ஆயினை என்பதை—(நீர்) நிகரில்லாதவரென்னு முண்
அறியேன்— (நான்) சம்மதியேன். [மையை

(ஏனெனில்)

யானே நீக்கினும்—நானே (மலத்தை) நீக்கிக்கொள்ளுவதாயினும்,
தானே நீங்கினும்—மலமே (என்னை விட்டு) நீங்கிக்கொள்ளுவ
கோனே—அரசே! நீர் [தாயினும்
வேண்டா—வேண்டியதில்லை (என்க).

(ஆகையா லதனையும்)

கூறல் வேண்டும்—விளக்குவீராக.

(நிற்க)

காட்டாக்கால்—(ஆசாரியன்) உணர்த்தாவிட்டால்
யார் காண்பார்—(ஞானத்தை) யாரறியப் போகின்றார்?

எனும் மாண்பு உரை—என்னும் (ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளது) [உண்மை யுரையை
உணர்ந்திலை—(நீர்) அறியாமலா இருக்கின்றீர்?
(இல்லையாகலின்)
பாண்டியன்—பாண்டிய ராசா
மன்ற—தெளிவாக
கேட்ப—அறியுமாறு
கிளக்கும்—(ஸ்ரீமத் சம்பந்தமூர்த்திசுவாமிகள்) உபதேசித்தருளிய
மெய் ஞானத்தின்—உண்மை ஞானத்தின் (பெட்டகமாகிய)
ஆட்பாலவர்க்கருள் என்பதை—'ஆட்பாலவர்க்கருள்' என்னுந்
அறி—(எனக்கு) விளக்கியருளுக. [திருப்பாசுரத்தையும்

ஈற்றடியில் அறிவி யென்னும் பிறவினைச்சொல் விவ்விகுதி தொக்கு அறியென நின்றது.

ஆசாரியனை நோக்கி மாணக்கன் நிகழ்த்தும் வினக்களின் தொகுதியே யிந்நூல். செய்யுள்தோறும் ஆசாரியனைச் சிவமாகவும், மாணக்கனை ஆன்மாவாகவுங் கொள்க.

சிவபிரானும் ஆணவமும் பகைப் பொருள்கள். ஆன்மாக்களுக்கு ஞானத்தைக் கொடுப்பவன் சிவபிரான்; அஞ்ஞானத்தைக் கொடுப்பது ஆணவம். ஆனல், ஆன்மாக்களிடங் காணப்படுவ தஞ்ஞானமே. ஆகையால், ஆணவமே யவைகளிற் பிரிப்பின்றி நிற்றல் கூடும். ஞானமென்பது ஆன்மாக்களிட மில்லை. ஆகையா லதனைக் கொடுக்குஞ் சிவபிரானும் ஆண்டில்லையாதல் வேண்டும். அங்ஙனமின்றி அவன் ஆணவத்தோடுகூடி ஆன்மாக்களில் நிற்பானுயின் ஆணவத்தைப் போக்கும் வலி அவனுக் கில்லையாகும். சுத்தன்,அமலன் முதலிய பெயர்களையும் அவன் இழக்க நேரும். இனி, அவன் ஆன்மாக்களை விட்டு விலகி நிற்பானுயின், அவைகளெல்லாம் அவனில்லாத இடமெனப்பட்டு அவனது சர்வ வியாபகம் பழுதுபடும். படவே, அவனுக்குப் பஞ்சகிருத்தியமும், அவைகளுக்கு வீடுபேறுங் கிடையா. பின்னை அவன் நிற்பதுதா னெப்படி?

சிவபிரான் ஞானத்தை யெப்படிப் புகட்டினும் பக்குவமில்லாத ஆன்மாக்கள் அதனைக் கிரகியா. பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கோ உபதேசம் மிகை. அவைக ளஃதின்றியே யுணரும். அங்ஙனமாயின் பக்குவம் போதுமே? அவனு முணர்த்துவ தேன்?

சடமாகிய பக்குவம் சித்தாகிய சிவபிரானைத் தருமா? தருமாயின், பக்குவத்துக் கியக்குஞ் சத்தியும், சிவபிரானுக் கியங்குஞ் சத்தியு முளவெனப்பட்டு அவன் தன் தலைமையை யிழப்பா னல்லவா?

ஆணவம், கன்மம், மாயை யென்னு மும்மலங்களுஞ் சடம். அவைக ளெப்படிப் பக்குவப்படினுந் தமது சடத்தன்மையில் மாறுவ தில்லை. ஆகவே, அவைகள் ஞானத்தை யறியா. ஆன்மாக்களுக்குச் சார்ந்ததன் வண்ணமாந் தன்மை யொன்றே யுண்டு. தம்மளவில் அவைகளுக் கெவ்வித மாறுதலு மில்லை. மாறுதலில்லாப் பொருளைப் பக்குவம் ஒன்றுஞ் செய்யாது. சிவபிரான் என்றும் ஒரே படித்தாய முழுஞான முள்ளவன். பக்குவம் அவனது ஞானத்தை யதிகப்படுத்தாது. ஆகவே, ஞானோபதேசத் திற் கேற்ற பக்குவம் இம் மூவரில் யாருக்கு வேண்டும்?

ஞானோபதேசமே ஆணவத்தை நீக்கும். அதற்குமுன் ஆன்மாவுக்கு அந் நீக்க மில்லை. இருக்குமாயின், ஆணவந் தானாகவே நீங்குதல் வேண்டும். அல்லது, ஆன்மா தானாகவே அதனை நீக்குதல் வேண்டும். இவ் விரண்டிலொன்றிருப்பினும், சிவபிரான் வேண்டியதில்லை. மேலும், மலத்தை நீக்கிக்கொள்ளுஞ் சத்தி ஆன்மாவுக்கும் உளதெனப்பட்டு அவனது நிகரின்மை கெடும். ஆகவே, ஞானோபதேசத்துக்குமுன் ஆணவநீக்கம் உளதெனக்கொண்டு அதனையே பக்குவ மென்னலாமா.?

ஆனால், ஞானோபதேசத்துக்கு ஆசாரியனது இன்றியமையாமையை ஸ்ரீமத் அப்பர் சுவாமிகளும், பக்குவத்தின் இன்றியமையாமையை ஸ்ரீமத் சம்பந்தமூர்த்தி சுவாமிகளும் உடன்படுகின்றார்கள். அவற்றினுண்மை யெப்படி?

---

3. அறிவறி யாமை யிரண்டு மடியேன்
செறிதலான் மெய்கண்ட தேவே—யறிவோ
வறியேனோ யாதென்று கூறுகே னுய்ந்து
குறிமாறு கொள்ளாமற் கூறு.

மெய்கண்டதேவே—மெய்கண்டதேவரே!
அடியேன்—நான்
அறிவு—அறிதல்
அறியாமை—அறியாதிருத்தல் (என்னும்)
இரண்டும்—இரண்டுதன்மைகளையும்
செறிதலால்—பொருந்தியிருப்பதால்
அறிவோ—அறிவுப்பொரு ளாவேனோ? (அல்லது)
அறியேனோ—அறிவில்பொரு ளாவேனோ?
யாது என்று—இன்னவகையான பொருளாவே னென்று
கூறுகேன்—(எனக்குத்தெரியாமையால்) நான் எப்படித் தீர்மா
[னிப்பேன்?

(ஆகையால் நீரே)
ஆய்ந்து—(என்விருப்பத்தின் மிகுதியைக்) கண்டு
குறி—(உமது) விடையில்
மாறு கொள்ளாமல்—(நான் மேலுஞ்) சந்தேக மடையாமல்
கூறு—(மிக விளக்கமாகச்) சொல்லியருளுக.

ஆன்மாக்களிடம் ஞானமும் அஞ்ஞானமுங் கலந்து காணப்படுவதால், அவை ஞானப்பொருளா? அஞ்ஞானப்பொருளா?

---

4. கூறிய மூன்று மலத்தின் குணக்குறி
வேறு கிளக்கின் விகற்பங் கற்பங்
குரோத மோகங் கொலையஞர் மதநகை
விராயெண் குணனுமா ணவமென விளம்பினை
யஞ்ஞா னம்பொய் யயர்வே மோகம்
பைசா சூந்நிய மாற்சரி யம்பய
மாயவேழ் குணனு மாயைக் கருளினை
யிருத்தலுங் கிடத்தலு மிருவினை யியற்றலும்
விடுத்தலும் பரநிந்தை மேவலென் றெடுத்த
வறுவகைக் குணனுங் கருமத் தருளினை
யாங்கவை தானு நீங்காது நின்று
தம்வழிச் செலுத்தித் தாமே தானா
யென்வழி யென்பதொன் றின்று மன்ன
வூரும் பெயரு முருவுங் கொண்டென்
னூரும் பெயரு முருவுங் கெடுத்த
பெண்ணை சூழ்ந்த வெண்ணையம் பதியிற்
சைவ சிகாமணி மெய்யர் மெய்ய
மும்மலஞ் சடமென மொழிந்தனை யம்ம
மாறுகோள் கூறல் போலுந் தேறுஞ்
சடஞ்செய லதனைச் சார்ந்திடு மெனினே
கடம்பட மதனுட் கண்டிலன் விடம்படு
மூன்றிரள் போன்ற தாயிற் றோன்றி
யணைந்தாங் ககறல் வேண்டுங் குணங்களும்
பன்மையின் றாகு மென்னவந் தணைதரத்
தானே மாட்டா தியானே செய்கில

னீயோ செய்யாய் நின்மல னுயிட்
டியல்பெனிற் போகா தென் று மயல்கெடப்
பந்தம் வந்த வாறிங்
கந்த மாதி யில்லா யருளே.

மன்ன—ஞான ராஜாவே!
ஊரும்—(திருவெண்ணெய்நல்லூரை) அவதாரத் தலமாகவும்,
பெயரும்—(மெய்கண்டான் என்பதைத்) திருப்பெயராகவும்,
உருவும்—(மானுட வடிவைத்) திருமேனியாகவும்
கொண்டு—தாங்கி (ஆசாரிய மூர்த்தியாக வெளிப்பட்டு)
என் ஊரும்—நான் வந்த வுலகத்தையும்,
பெயரும்—(கொண்ட) பெயரையும்,
உருவும்—(எடுத்த) உடம்பையும்,
கெடுத்த—(எனக்கு) இல்லையாகச் செய்து (என்னைத் தமது வியாபகத்து ளடங்கி) வியாபிக்கச் செய்தவரும்
பெண்ணை சூழ்ந்த—பெண்ணையாறு சூழ்ந்த
வெண்ணை அம் பதியில்—திருவெண்ணெய்நல்லூரென்னுந் திவ்வியத்தலத்தில் (எழுந்தருளியிருக்கின்றவரும் ஆகிய)
சைவ சிகாமணி—சைவசிகாமணியே!
மெய்யர் மெய்ய—மெய்யடியா ருள்ளத்தில் வீற்றிருக்கும் மெய்[கண்ட தேவரே!
அந்தம் ஆதி இல்லாய்—முடிவு முதலு மில்லாதவரே!
கூறிய—(ஆகமங்கள்) பிரஸ்தாபிக்கின்ற
மூன்று மலத்தின்—(ஆணவம், கன்மம், மாயை யென்னு) மூன்று[மலங்களின்
குணக்குறி— தன்மைகளது அடையாளங்களை
வேறு—தனித்தனியாக
கிளக்கின்—(நான்) வினவ (நீர்)
விகற்பம்—தன்னை மதித்தல்,
கற்பம்—முனைத்து நிற்றல்,
குரோதம்—(பிறரைக்) கோபித்தல்,
மோகம்—(விடயங்களில்) மயங்குதல்,
கொலை—(உயிர்களைக்) கொல்லுதல்,
அஞர்—(விடயங்களின் பிரிவிற்) கவலுதல்,
மதம்—(அவைகளைப் பெரிது) மதித்தல்,
நகை—(வாழ்விற்) பெருமித மடைதல்
எண்குணனும்—(ஆகிய) எட்டுக் குணங்களும்

விராய்—சேர்ந்து
ஆணவம் என—ஆணவத்தின் அடையாளங்க ளென்று
விளம்பினை—உபதேசித்தீர்.
அஞ்ஞானம்—திரிபுணர்ச்சி,
பொய்—பொய் பேசல்,
அயர்வு—மறத்தல்,
மோகம்—ஆசைப்படுதல்,
பைசாசூந்நியம்—பொறாமைப்படுதல்,
மாற்சரியம்—பிறர்பால் நீண்ட வெறுப்பு,
பயம்—அஞ்சுதல்
ஆய—ஆகிய
எழ் குணனும்—எழு குணங்களும்
மாயைக்கு—மாயையின் அடையாளங்களென்று
அருளினை—உபதேசித்தீர்.
இருத்தலும்—யாதானு மோரிடத்திற் றங்குதல்,
கிடத்தலும்—நோயாய்க் கிடத்தல்,
இருவினை இயற்றலும்—புண்ணிய பாவங்களைச் செய்தல்,
விடுத்தலும்—பற்றுக்களை விடுதல்,
பாநிந்தை (உம்)—பிறரை நிந்தித்தல்,
மேவல் (உம்)—இகழ்ந்தாரை நேசித்தல்
என்று எடுத்த—என்று விளக்கிய
அறு வகைக் குணனும்—ஆறு குணங்களும்
கருமத்து—கருமத்தின் அடையாளங்களென்று
அருளினை—உபதேசித்தீர்.

(நிற்க)

அவைதானும்—அம் மும்மலங்களும்
நீங்காது—(என்னைவிட்டு) நீங்காமல்
தாமே தான் ஆய்—அவைகள் நானே (யென்று எனக்குத் திரிபு ணர்ச்சி யுண்டாகும்படி என்மயம்) ஆகி
நின்று—(என்னோடு) கலந்திருந்து
தம் வழி—தமது வசத்திலேயே
செலுத்தி—(என்னை யிழுத்துத்) தொழிற்படுத்தலால்
என்வழி என்பது ஒன்று—எனக்கெனச் சுதந்திரச்செய லொன்
இன்றும்—இல்லையாகும். [றுயினும்

(நீர்)

மும்மலம்—அம்மூன்று மலங்களும்

சடம் என—சடப்பொருள்களென்றும்
மொழிந்தனை—உபதேசித்தீர்.
(ஆனால் என்னை வசப்படுத்துஞ் செயல் அவைகளுக்குளதாக அவைகளைச் சடமென்றல்)
மாறுகோள் கூறல்—விபரீதப் பேச்சாக விருக்கின்றது.
(ஆனால்)
தேறும்—நிச்சயிக்கப்பட்ட
சடம்—சடப்பொருள்கள் (ஆன்மாவோடு கூடுதலால்)
செயலதனை—மயக்குந் தொழிலை
சார்ந்திடும்—உடையனவாகும்:
எனின்—என்பீராயின்
(அத்தொழிலை)
கடம் படம் அதனுள்—குடம் துணி முதலிய சடங்களில்
கண்டிலன்—(நான்) காணவில்லை.
(ஆனால் அது)
ஊன் திரள்—உடலில்
படும்—படுகின்ற
விடம் போன்றது—விஷம் (அறிவை மயக்குதல்) போன்றது
ஆயின்—என்பீராயின் (அவ்விஷம்)
தோன்றி—வந்து (அறிவை)
அணைந்து—மயக்கி
அகறல் வேண்டும்—(கொஞ்ச நேரத்தில்) விட்டு நீங்குகின்றது.
(அன்றியும் மலங்களுக்குப்போல அதற்கு)
குணங்களும்—தன்மைகளும்
பன்மை இன்றாகும்—பலவாதலில்லை.
(இன்னும்)
தானே—(அம்மலங்களில்) ஒன்றுதானும்
வந்து—(வலிய) வந்து
என்னை—என்னை
அணைதரமாட்டாது—பந்தித்தல் முடியாது.
யானே—நானே (வலியப்போய்)
செய்கிலன்—(அவைகளைப்) பற்றிக்கொள்ளவு மாட்டேன்.
நீயோ—நீரும்
நின்மலன் ஆயிட்டு—மலமில்லாதவ ராகையால்
செய்யாய்—(என்னையும் மலங்களையுஞ்) சேர்த்துவைக்கமாட்டீர்.
இயல்பு எனின்—(அவைகள் எனது) தன்மைக ளென்பீராயின்

போகாது—(முத்தியிலும் என்னைவிட்டு) நீங்கா.
(ஆகலின் நீர்)
என்றும்—இனியேனும்
மயல்—சந்தேகம்
கெட—நீங்கும்படி
பந்தம்—மலங்கள்
வந்தவாறு—(எனக்கு) வந்த விதத்தை
இங்கு—இப்போது
அருள்—உபதேசித்தருளுக.

சடம் எந்தக் காரியத்துக்கும் வினைமுதலாத லில்லை. மும்மலங்களும் சடம். அவை வினை முதலாக நின்று ஆன்மாவை மயக்குவ தெப்படி?

அவை சடமாயினும் ஆன்மாவோடு கூடுவதால் மயக்குந் தொழிலைச் செய்யுமெனின், கடம் பட முதலிய சடங்களும் ஆன்மாவோடு கூடுகின்றன. அவையும் ஆன்மாவை மயக்காமை யேன்?

விஷமாகிய சடம் அறிவை மயக்குவ துண்மை. ஆனல், அது சிறிது பொழுதில் நீங்கிவிடுகின்றது. அங்ஙனமே மலங்களும் நீங்காமை யேன்?

இன்னும், விஷத்துக்கு மயக்குஞ் சக்தி யொன்றே யுண்டு. மலங்களுக்கோ பல சக்திகள் உளவாதல் மேற்கூறப்பட்டது. அங்ஙனமாயின் உவமானத்தி லுள்ளவாறு உவமேயத்திலு மில்லாமை யேன்?

மலஞ் சடப்பொரு ளாகலின் ஆன்மாவைத் தானக வந்து பந்தியாது. ஆன்மா துன்பத்துக் கேதுவாகிய மலத்தில் தானகப்போ யகப்படாது. சிவம் அருண்ஞானப் பொருளாகலின் ஆன்மாவையும் மலத்தையுஞ் சேர்த்துவையாது. இன்னும், குணியைவிட்டுக் குணம் எக்காலத்திலும் பிரிவதேயில்லை. மலம் ஆன்மாவின் குணமாயின் முத்தியினும் ஆன்மாவை விட்டு விலகாது. அங்ஙனமாயின், ஆன்மாவுக்கு மலபந்தம் வந்தவிதம் எப்படி?

---

5. அருள்முன்பு நில்லா கடியேற்குக் கண்ணின்
றிருள்கண்ட வாறென்கொ லெந்தாய்—மருள்கொண்ட
மாலையா வெண்ணைவாழ் மன்னவா வென்னுடைய
மாலையா மாற்ற மதி.

எந்தாய்—எனது தந்தையே!
மருள்கொண்ட—(வண்டுகள்) மருள் என்னும் இசையைப் பாடுகின்ற
மாலையா—மாலையை யணிந்தவரே!
வெண்ணைவாழ்—திருவெண்ணெய்நல்லூரில் வாழ்கின்ற

மன்னவா—ஞானராஜரே!
ஐயா—குருமூர்த்தியே!
(மலம் இருள்போன்ற தாகலின்)
அருள் முன்பு—(உமது) ஞானப் பிரகாசத்தின்முன்
நில்லாது—மடங்கி யில்லையாய்விடும்.
அடியேற்கு—எனக்கோ
கண் அன்று—(தனித்து நின்று ஒன்றனை) அறியுஞ் சக்தியுமில்லை.
(அப்படியிருக்க)
இருள் கண்ட வாறு—(நான்) மலத்தைத் தரிசித்த விதம்
என்—எப்படி? (என்னும்)
என்னுடைய மால்—என்னுடைய மயக்கத்தை
மாற்ற—போக்குதற்கு
மதி—திருவுளங்கொண் டருளுக.

ஆன்மா கருவிகரணங்களோடு கூடியிருக்கும்போதும் மலத்தைத் தரிசிப்பதில்லை. சிவப்பிரகாசத்தின்முன் மலவிருள் மடங்கிவிடுவதால் கருவிகரணங்களெல்லாம் நீங்கிச் சிவப்பிரகாசத்தைப் பெற்ற பின்னரும் அது மலத்தைத் தரிசித்தல் முடியாது. கருவி கரணங்களையாவது சிவத்தை யாவது சாராமல் அஃதறிதலு மில்லை. ஆனால் அதற்கு மலதரிசன முண்டென்றுஞ் சொல்லப்படுகின்றது. அத் தரிசனங் கிடைப்ப தெப்படி?

---

6. மதிநுதல் பாக னாகி கதிதர
வெண்ணைத் தோன்றி நண்ணியுள் புகுந்தென்
னுளம்வெளி செய்துன் னளவில் காட்சி
காட்டியெற் காட்டினை யெனினே நாட்டியெ
னுண்மையும் பெருமையு நுவலி னண்ணல்
பாதாள சத்தி பரியந்த மாக
வோதி யுணர்ந்த யானே யேக
முழுத்துநின் றனனே முதல்வ முழுத்தும்
புலன்கடைப் பூழை நுழைந்தனன் கலங்கி
யாங்கைந் தவத்தையு மடைந்தன னீங்கிப்
போக்கு வரவு புரிந்தனன் றாக்கி
யெவ்விடத் துண்மையு மிவ்விடத் தார்தலுஞ்
செல்விடத் தெய்தலுந் தெரித்த மூன்றினு
ளொன்றெனக் கருளல் வேண்டு மென்று

மில்ல திலதா யுள்ள துளதெனுஞ்
சொல்லே சொல்லாய்ச் சொல்லுங் காலைச்
சிறுத்தலும் பெருத்தலு மிலவே நிறுத்தி
யானை யெறும்பி ஞனது போலெனின்
ஞான மன்றவை காய வாழ்க்கை
மற்றவை யடைந்தன வுளவெனி னற்றன்று
விட்ட குறையி னறிந்து தொன்று
தொட்டுவந் தனவென வேண்டு நட்ட
பெரியதிற் பெருமையுஞ் சிறியதிற் சிறுமையு
முரியது நினக்கே யுண்மை பெரியோ
யெனக்கின் ருகு மென்று
மனக்கினி யாயினி மற்றது மொழியே.

மதிநுதல் பாகன் ஆகி—உமையொருபாக மானவரே!
முதல்வ—தேவதேவரே!
பெரியோய்—எங்கும் நிறைந்தவரே!
என்றும்—எப்போதும்
மனக்கு இனியாய்—(என்) சிந்தைக் கினியவரே!

(நீர்)

கதி தா—(உமது) திருவடி யின்பத்தைத் தரும்பொருட்டு
வெண்ணை—திருவெண்ணெய்நல்லூரில்
தோன்றி—(ஆசாரிய மூர்த்தியாக) அவதரித்து,
நண்ணி—(என்னிடம்) வலிய வந்து,
என் உள் புகுந்து—என் அறிவிற் கலந்து,
உளம் வெளி செய்து—அவ் வறிவைச் சுத்தப் படுத்தி
அளவு இல் உன் காட்சி—காண்டல் முதலிய அளவைகட் கெட்டாத உமது உண்மையை
காட்டி—(எனக்குத்) தரிசிப்பித்து
எற்காட்டினை—என் னுண்மையையுந் தரிசிப்பித்தீர்.
ஏனின்—என்றால் (அப்பொழுது)
நாட்டி—விளக்கமாக
என் நுண்மையும்—என தறிவையும்
பெருமையும்—வியாபகத்தையும்
நுவலின்—சொல்லுவதாயின்
அண்ணல்—நீர்
(அண்டங்களெல்லாம் நிலை பெயராமல் நிற்கும்படி மேலே அழுத்தமாக வைக்கின்ற உமது சத்திமுதல்)

பாதாள சத்தி பரியந்தம்—கீழே ஆதாரமாக வைக்கின்ற உமது சத்திவரை
ஆக—(அவை) பரவி நிற்க,
ஓதி உணர்ந்த யான்—ஞானத்தைக் கேட்டுத் தெளிந்த நான்
ஏக முழுத்தும்—எங்குமாய்
நின்றனன்—விளங்குகின்றேன் (என்னலாம்).

(இப்போது எனதியல்பிது. இவ்வியல்புடைய நான் இதுகாறும்)
முழுத்தும்—(என்கால) மெல்லாம்
புலன்—புலனை நுகர்தற்பொருட்டு
கடைப் பூழை—இழிந்த பஞ்சேந்திரியங்களிலும்
நுழைந்தனன்—அலைந்தேன். (அன்றியும்);
கலங்கி—(அறிவு) மயங்கி
ஐந்து அவத்தையும்—(சாக்கிர முதலிய) ஐந்து அவத்தைகளிலும்
அடைந்தனன்—சென்றேன்;
நீங்கி—அன்றியும்
போக்கு வரவு—இறப்புப் பிறப்புக்களிலும்
புரிந்தனன்—சுழன்றேன்.

(இவைகளும் எனதியல்பாகக் காணப்படுகின்றன. ஆகலின் நீர்)
தூக்கி—(எனது விருப்பத்தை) நன்கறிந்து
எவ்விடத்து உண்மையும்—எங்கும் நிறைதலாகிய வியாபகம்,
இவ்விடத்து ஆர்தலும்—அவத்தை முதலியன வுறுதலாகிய ஏகதேசம்,
செல் இடத்து எய்தலும்—சங்கார காலத்தில் எல்லாம்போய்த் தான் ஒரு பொருளெனமட்டு மிருத்தல்
தெரித்த—(என்று) சொல்லப்பட்ட
மூன்றினுள்—இம் மூன் றியல்புகளிலும்
ஒன்று—எனது உண்மையான வியல்பு இதுவென்று
எனக்கு—எனக்கு
அருளல் வேண்டும்—கூறியருளல் வேண்டும்.

(இன்னும் நீர்)

இல்லது—இல் பொருள்
என்றும் இலது ஆய்—எக்காலத்தும் இல்பொருளா யொழிய
உள்ளது—உள்பொருளே
(என்றும்) உளது எனும்—எக்காலத்தும் உள்பொருளாகும் என்கின்ற
சொல்லே—சற்காரிய வாதத்தையே
சொல் ஆய்—உண்மை வாதமாக (அங்கீகரித்து)
சொல்லுங்காலை—விவகரிப்பீரல்லவா? அப்படியானல்

(ஒரே பொருளாகிய எனக்கு)
சிறுத்தலும்—ஏகதேசப்படுதலும்,
பெருத்தலும்—வியாபித்தலும்
(ஆகிய இரண்டு மாறுபட்ட தன்மைகள்)
இலவே—இருத்தல் கூடாவே?
நிறுத்தி—அதுநிற்க:
(எனது பெருமை சிறுமைகள்)
யானை (யின்)—யானை யுடலில் (நின்ற வுயிர் பெருத்தும்)
எறும்பின்—எறும்பின் உடலில் (நின்ற வுயிர் சிறுத்தும்)
ஆனது போல்—இருத்தல் போன்றன
எனின்—என்பீராயின்
அவை—உடலின் பெருமை சிறுமைகள்
ஞானம் அன்று—உயிருக்கு அல்லவாய்
காய வாழ்க்கை—உடலின் தன்மையாகவே யொழியும்.
மற்று—இன்னும் (நீர்)
அவை—அப் பெருமை சிறுமைகள்
அடைந்தன—(உயிர்) அடைந்த வுடம்புகளின் (அளவுக்கேற்ப)
உள எனின்—(அவ் வுயிரி னறிவுக்கும்) உள்ளனவென்பீராயின்
அற்றன்று—அதுவும் பொருந்தாது.
(ஏனெனில் அவ் விவகாரத்தால்)
தொன்றுதொட்டு—அநாதிதொட்டே
விட்டகுறையின்—முற்பிறப்பின்
அறிந்து—அறிவோடு
வந்தன—(அடுத்த பிறப்பிலும் அவ்வுயிர்) வரும்
என வேண்டும்—என்பது சித்திக்கும்.
(அன்றியும்)
நட்ட—நிலைநிறுத்தப்பட்ட
பெரியதின்—பெரியதிற்கெல்லாம்
பெருமையும்—பெரியதாயிருத்தலும்,
சிறியதின்—சிறியதிற்கெல்லாம்
சிறுமையும்—சிறியதாயிருத்தலும்
நினக்கே—உமக்கே
உரியது—உரியன.
உண்மை—அவ் வியல்புகள்
எனக்கு—எனக்கு
இன்றாகும்—இலவாகும்.

(ஆகலின் நீர்)
இனி—இப்போதாயினும் (தயைகூர்ந்து)
அது—(எனது) உண்மை யியல்பை
மொழி—கூறியருளுக.

ஆசாரியனது அநுக்கிரகத்துக்குப் பின் ஆன்மா சர்வ வியாபகத்துவத்தையும், சர்வஞ்ஞத்துவத்தையு மெய்துகின்றது. அவ் வநுக்கிரகத்துக்கு முன் அஃதேகதேச வியாபகத்துவத்தையும், கிஞ்சிக்ஞத்துவத்தையு மடைகின்றது. சங்கார காலத்திலோ அஃதெல்லா மொழிந்து தான்மாத்திரமாய்க் கிடக்கின்றது. ஆகவே, சர்வவியாபக சர்வஞ்ஞத்துவங்கள், ஏகதேச வியாபக கிஞ்சிக்ஞத்துவங்கள், இவையெல்லாம் போயநிலை யென்னுமிம் மூன்றில் ஆன்மாவுக்கு உண்மையாகவுள்ள வியல்பெது?

சர்வக்ஞத்துவமும், கிஞ்சிக்ஞத்துவமும் மாறுபட்ட தன்மைகள். ஒன்று பிரிதொன்றாக மாறாது. இரண்டும் ஒரே பொருளில் இருத்தலுமில்லை. இன்னும், அணுவுக் கணுவாதலும், மகத்துக்கு மகத்தாதலுமாகிய வியல்பு சிவபிரானுக்கே யுண்டு. ஆனால், ஆன்மா கிஞ்சிக்ஞத்துவத்தை விட்டுச் சர்வக்ஞத்துவத்தை யடைவ தெப்படி?

---

7. மொழிந்த வவத்தை முதலடியே னின்றாங்
கொழிந்தன நான்கு முணர—விழிந்தறிந்
தேறிற்றிங் கில்லை யெழில்வெண்ணை மெய்த்தேவே
தேறிற்றென் கொண்டு தெரித்து.

எழில்—அழகுபொருந்திய
வெண்ணை—திருவெண்ணெய்நல்லூரில் (எழுந்தருளியிருக்கின்ற)
மெய்த்தேவே—மெய்கண்டதேவரே!
அடியேன்—நான்
மொழிந்த—(ஐந்தென்று) கூறப்பட்ட
அவத்தை—அவத்தைகளில்
முதல்—சாக்கிரத்தை
நின்றாங்கு—அறிவதுபோன்று
ஒழிந்தன—மற்றைய
நான்கும்—நான்கு அவத்தைகளையும்
உணர—அறிய (வேண்டுமாயின்)
அறிந்து—சாக்கிர வறிவோடு (மற்ற வவத்தைகளில்)
இழிந்து—இறங்கவும்

இங்கு—(மீண்டும்) சாக்கிரத்துக்கு
ஏறிற்றில்லை—ஏறவுமுடியாதவனு யிருக்கின்றேன்.
(ஆகலின், நான் எல்லா வவத்தைகளையும்)
என்கொண்டு—எந்தவிதமாக
தேறித் தெரித்தது—அறிந்து(பிறர்க்குத்) தெரிவித்தது?

'தெரித்துத் தேறிற்று' என்பதைத் 'தேறித் தெரித்தது' எனமாறுக. சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என அவத்தைகள் ஐந்து. சாக்கிரத்தில் ஆன்மாவுக்கு மற்ற அவத்தைகள் விஷயமாவதில்லை. ஆன்மாவும் சாக்கிர அறிவோடு மற்ற அவத்தைகளிற் பிரவேசிப்பதில்லை. ஆகவே, அது சாக்கிரத்தைப் போன்று மற்ற அவத்தைகளையுந் தெரிவது எப்படி?

---

8. தெரித்ததென் கொண்டெனை யுருத்திர பசுபதி
செடிய னேனையு மடிமை செய்யப்
படிவங் கொண்டு வடிவுகாட் டில்லாப்
பெண்ணை யாளும் வெண்ணை மெய்ய
வவத்தையிற் றெரித்தன ருயி னவத்தை
தெரித்தாங் கிரித்தலு மிலனே திருத்துங்
கால முதலிய கருவி யாயின்
மாலும் பிரமனும் வந்தெனை யடையா
ரோதுங் காலை யொன்றையொன் றுணரா
சேதந மன்றவை பேதைச் செயலிச்
சேதந வானுற் செயல்கொள வேண்டுநற்
போத மிவற்றைப் புணர்வதை யறியேன்
கருவித் திரளினுங் காண்பதோ ரொன்று
யொருவுவ தறியே னுணர்வில ஞதலி
னிற்கொடு கண்டன ருயி னெற்குக்
கருவி யாயினை பெருமையு மிலவே
யானே பிரமங் கோனே வேண்டா
வின்னுங் கேண்மோ மன்ன நின்னின்
முன்ன மென்ற னுணர்வில ஞதலி
னென்னைக் காண்பினுங் காண்பல காணு
துன்னைக் காண்பினுங் காண்பல வுன்னே
டொருங்கு காண்பினுங் காண்பல வருந்துணை

கண்ட வாறே தெனது கண்ணே
யண்ட வாண வருட்பெருங் கடலே.

உருத்திர—துன்பங்களை நீக்குபவரே!
பசுபதி—ஆன்மநாயகரே!
செடியனேனையும்—பாவியேனையும்
அடிமை செய்ய—ஆட்கொள்ளும் பொருட்டு
வடிவு காட்டில்லா—(தமது) உண்மையியல்பை மறைத்து
படிவங் கொண்டு—(ஆசாரியத்) திருமேனிதாங்கி
பெண்ணை ஆளும்—பெண்ணையாறு பாய்கின்ற
வெண்ணை—திருவெண்ணெய்நல்லூரில் (எழுந்தருளியிருக்கின்ற)
மெய்ய—மெய்கண்டநாதரே!
மன்ன—ஞானராஜரே!
எனது கண்ணே—என்னறிவுக்கறிவானவரே!
அண்டவாண—சிவலோக நாயகரே!
அருட்பெருங் கடலே—கிருபாசமுத்திரமே!

(நான்)

எனை—என்னை
தெரித்தது—(வெளியிட்டுக்) கண்டது
என் கொண்டு—எப்படி?
அவத்தையில்—அவத்தைகளிற் (சென்று மீள்வதை வைத்து)
தெரித்தனன்—கண்டேன்
ஆயின்—என்பீராயின்,

(நான்)

அவத்தை—அவத்தைகளை
தெரித்து—(என்னின் வேறாகக்) கண்டு
இரித்தலும் இலன்—நீக்குகின்றேனில்லை.

(அல்லது நான் என்னைக்காண)

திருத்தும்—(ஆன்மசத்தியை) விளக்குகின்ற
காலம் முதலிய—காலம் (நியதி) முதலிய (தத்துவங்களே)
கருவி—கருவிகளாக (உபகரிக்கும்)
ஆயின்—என்பீராயின்,

(அவைகளே எனக்குப் போதுமாக)

எனை—என்பொருட்டு

(அவைகளின்கீழ்ப்பட்ட பிரகிருதி தத்துவங்களை
யுண்டாக்கவுங் காக்கவும்)

பிரமனும் மாலும்—பிரம விஷ்ணுக்கள்
வந்தடையார்—நிலைபெறுதல்வேண்டா.
ஓதுங்காலை—(இன்னும்) சொல்லுவதாயின்,
ஒன்றை—ஒரு கருவியை
ஒன்று—மற்றொரு கருவி
உணரா—அறியமாட்டாது.
அவை—அக்கருவிகளனைத்தும்
சேதநம் அன்று—அறிவுப்பொருள்களல்ல;
பேதைச்செயல்—சடத்தன்மையை (யுடையவை).
(ஆகையால் அவை)
இச் சேதநவானால்—அறிவுப் பொருளாகிய என்னாற்றான்
செயல்கொள வேண்டும்—தொழிற்படுதல் வேண்டும்.
(இன்னும்)
நல் போதம்—நல்ல என்னறிவு
இவற்றை—இக்கருவிகளை
புணர்வதை—சேர்ந்து விளக்கமுறுவதையும்
அறியேன்—(நான்) அறிகின்றிலேன்.
கருவித்திரளினும்—(எனக்கு உபகாரமாக) இத்தனை கருவிகளிருந்தும்
காண்பது—(நான்) அறிவது
ஓர் ஒன்று ஆய்—ஒவ்வொரு காலத்தும் ஒவ்வொருபுலனையே;
(எல்லாவற்றையும் ஒருசேர வன்று).
(கருவிகளெல்லாம் என்னை விட்டு நீங்கினாலோ நான்)
உணர்வு இலன்—அறிவில்லாதவனாவேன்.
ஆதலின்—ஆகையால்,
ஒருவுவது—(அவைகள் என்னைவிட்டு) நீங்குவதையும்
அறியேன்—(நான்) அறியமாட்டேன்.
(அவைகளின் நீக்கத்தை)
நிற்கொடு—உமது உபகாரத்தால்
கீண்டனன்—அறிவேன்
ஆயின்—என்பீராயின்,
(நீர்)
எற்கு—எனக்கு
கருவி ஆயினை—அறிவையெழுப்புந் தத்துவங்களிலொன்றாவீர்.
(ஆகவே)
பெருமையும் இல—கருத்தாவாதற்பெருமை யுமக்கு இல்லையாகும்.

(உம்மைக் கருவியாகக் கொண்ட)
யானே—நானே (கருத்தாவாகி)
பிரமம்—கடவுளாவேன்.
கோன்—(எனக்குத்) தலைவராக (நீர்)
வேண்ட—வேண்டப்படுதலில்லை.
இன்னும் கேண்மோ—இன்னுமொன்றைக் கேட்பீராக.
(அஃதாவது)
நின்னின்முன்னம்—உமது ஞானப் (பிரகாசத்தின்) முன்னே
என்றன் உணர்வு—எனது ஞானம்
இலன் ஆதலின்—மடங்கி நிற்பேனாகலின்,
(நான் உமது உபகாரத்தால்)
என்னைக்காண்பினும்—என்னைப் பார்க்கத் துணியினும்
காண்பு அல—பார்த்ததாகாது;
காணாது—(என்னைப்) பார்ப்பதைவிட்டு
உன்னைக்காண்பினும்—உம்மைப் பார்க்கத் துணியினும்
காண்புஅல—பார்த்ததாகாது;
(அங்ஙனம் பிரித்தறியாமல்)
உன்னோடு—உமது ஞானத்தில்
ஒருங்கு—(எனது ஞானங் கலப்பதா யிருந்து) அத்துவிதமாக
காண்பினும்—பார்க்கத்துணியினும் [(இருவரையுமே)
காண்பு அல—பார்த்ததாகாது (என்பதே).
(ஆகலின், நான் என்னைத் தரிசிப்பதற்கு உதவுகின்ற)
அருந்துணை—அருமையான துணையை
கண்டவாறு—பெறும் விதம்
ஏது—எப்படி? (கூறியருளுக).

ஆன்மா அவத்தைகளைத் தன்னின் வேறாகப் பார்த்தல் முடியாது. ஆகையால், அது தன்னைக் காண்பதற்கு அவத்தைகள் துணைசெய்வதெப்படி?

காலம் நியதி முதலிய அசுத்த தத்துவங்களும், ஏனைப் பிரகிருதி தத்துவங்களுஞ் சடம். அவை கருவிகளாக நின்று ஆன்மாவி னறிவை விளக்கும். தத்துவங்க ளில்லையாயின் ஆன்மாவுக் கறிவு விளக்க மில்லை. இவ்விரண்டுக்குமுள்ள வொற்றுமை நயத்தால் தத்துவங்களே ஆன்மாவெனச் சந்தேகிக்கவும் படும். ஆன்மா இத்தகைய தத்துவங்களை விட்டுத் தன்னைப் பிரித்துக் காண வேண்டுமாயின், அதனறிவை விளக்க வேறு துணை

யேதேனும் வேண்டும். வேண்டாதாயின் அது தன்னைக் காண்பதற்குத் துணையாவ தெது?

இறைவனே துணையெனின் அவனுந் தத்துவங்கள் போன்று ஆன் மாவுக்குக் கருவியே யாவன். ஆகவே, கர்த்தாவென்னும் பெயர் அவனுக்கு எடுபடும். படவும், ஆன்மாவே இறைவனையுந் தத்துவங்களையுங் கருவி யாகக்கொண்ட கருத்தாவாவன். அங்ஙனமாயின், அது தன்னைக் காணக் கடவுள் துணையாதல் கூடுமா? இன்னும், சிவப்பிரகாசத்தில் ஆன்மப் பிர காசம் ஒளிமழுங்கும். அப்போது ஆன்மா தனது மடங்கிய அறிவால் தன் னையுங் காணமுடியாது; சிவத்தையுங் காணமுடியாது. இனி, மடங்கு கின்ற ஆன்மப் பிரகாசம் மடக்குகின்ற சிவப்பிரகாசத்திற் கலத்தலு முடி யாது. அங்ஙனமாயின், அது தன்னையுஞ் சிவத்தையும் ஒருங்கு பார்த்த லுமில்லை. பின்னை, ஆன்மா தன்னைக் காண்பதற்கு உபகரிக்குந் துணை யெது?

---

9. கடலமுதே வெண்ணைக் கரும்பேயென் கண்ணே
யுடலகத்து மூலத் தொடுங்கச்—சடலக்
கருவியா தாங்குணர்த்தக் காண்பதுதா னென்னை
மருவியா தென்றுரைக்க மன்.

கடல் அமுதே—பாற்கடலினின்றெழுந்த அமுதம் போன்றவரே!
வெண்ணை—திருவெண்ணெய் நல்லூரில்
கரும்பே—கரும்பையொத் தெழுந்தருளி யிருக்கின்றவரே!
என் கண்ணே—எனக்குக் கண்போன்றவரே!
மன்—ஞானராஜரே!

(நான் உறங்கும்போது)

உடலகத்து—(என்) உடலில்
மூலத்து—துரியாதீதத்தில்
ஒடுங்க—அடங்கிக் கிடப்ப
ஆங்கு—அப்போது
உணர்த்த—(என்னை) யெழுப்புதற்கு
சடலக்கருவி—(என்) உடற்கருவிகளுள்
யாது—எக்கருவி (உதவுகின்றது?)

(நான் எழும்போது)

என்னை மருவி—எக்கருவியைப் பற்றிக்கொண்டு
காண்பது—எழுவேன்?
யாது என்று—அக்கருவி யாதென்று

உரைக்க—(நீர்) கூறியருளுக.

ஆன்மாவின் அயர்ந்த நித்திரையில் தத்துவங்கள் நீங்கிநிற்கின்றன. அங்ஙனமாயின், அதையெழுப்புங் கருவி யெது? ஆன்மா எக்கருவியைப் பற்றிக்கொண் டெழுகின்றது?

---

10. மன்னிய கன்மச் சமத்திடை மலங்களை
யன்னிய மாக்கி யருள்வழி யதனு
லென்னுள் புகுந்தனை யெனினே முன்னைத்
திரிமலந் தீர்த்த தேசிக நின்னே
டொருவுத லின்றி யுடந்தையே யாகும்
பெருநிலை யாகல் வேண்டு மருவிடு
மும்மல மதனு லெம்முணின் றிலையெனி
னம்மலத் திரிவுஞ் செம்மலர்த் தாணிழற்
சேர்தலு மிலவாய்ச் சார்பவை பற்றிப்
பெயர்வில னுகும் பெரும தீர்வின்
றமைந்த கருமத் தியைந்தவை யல்லது
சமைந்தன விலவெனச் சாற்றி னமைந்த
மாயேயங் கன்ம மாமல மூன்று
மாயா தாகவே யார்ச்சந மாயையி
னுற்பவந் தீரா தொழுகுமொன் றென்றி
னிற்சம மாயி னல்லது நிற்பெற
வில்லென மொழிந்த தொல்லறந் தனக்கு
மேயா தாகு நாயே னுளத்து
நின்றனை யென்பனே நின்றிலை யென்பனே
பொன்றிய பொன்றிற் றிலமல மென்பனே
வொன்றினை யுரைத்தருண் மன்ற குன்றுப்
பெண்ணைப் புனல்வயல் வெண்ணைக் கதிபதி
கைகண் டலைவாய் கால்செவி மூக்குயர்
மெய்கொண் டென்வினை வேரறப் பறித்த
மெய்கண்ட தேவே வினையிலி
மைகொண்ட கண்ட வழுவிலென் மதியே.

முன்னை—அநாதியாகிய
திரிமலம்—மும்மலங்களையும்

தீர்த்த—(எனக்கு) இல்லையாகச்செய்த
தேசிக—தேசிக மூர்த்தியே!
பெரும—பெருமானே!
குன்ரு—குறையாத
பெண்ணைப் புனல்—பெண்ணையாறு (பாய்கின்ற)
வயல்—வயல்கள் (சூழ்ந்த)
வெண்ணைக்கு—திருவெண்ணெய் நல்லூர்க்கு
அதிபதி—அரசரே!
கை கண் தலை வாய் கால் செவி மூக்கு—கை கண் முதலிய வுறுப் [புக்கள்
உயர்—விளங்குகின்ற
மெய்கொண்டு—திருமேனிதாங்கி (ஆசாரியனாக வெளிப்பட்டு)
என்வினை—எனது ஆகாமிய சஞ்சித பிராரத்தங்களை
வேர் அற—அடியோடு இல்லையாகும்படி
பறித்த—களைந்தெறிந்த
மெய்கண்ட தேவே—மெய்கண்ட தேவரே!
வினை இலி—கன்மபந்த மில்லாதவரே!
மை கொண்ட கண்ட—(விஷக்) கறுப்பேறிய கண்டத்தையுடை [யவரே!
என் வழு இல் மதியே—எனக்குக் குற்றமற்ற ஞானப்பிழம்பாயிருப் [பவரே!
மன்னிய—(என்னை யநாதியே) பந்தித்த
கன்மச் சமத்திடை—இருவினைகளுந் துலையொத்த காலத்தில்
(நீர்)
மலங்களை—(எனது) மும் மலங்களையும்
அந்நியம் ஆக்கி—நீக்கி
அருள்வழியதனால்—(உமது) அநுக்கிரக வாயிலாய்
என்னுள்—என்னிடத்தில்
புகுந்தனை எனின்—கலந்து வதிவீராயின்
(அம்முத்தியில் நான் உம்மினின்றும்)
ஒருவுதல் இன்றி—விலகுதலின்றி
நின்னோடு—உம்மோடு
உடந்தை ஆகும்—அத்துவித மாதலாகிய
பெருநிலை—உயர்ந்த கதியை
ஆகல் வேண்டும்—பெறுதல்வேண்டும்.
(ஆனால் இப் பெத்தத்தில்)
மும்மலம்—மூன்று மலங்களும்

மருவிடும் அதனால்—(என்னைப்) பந்தித்திருக்குமாகலின்
(நீர்)
எம்முள்— என்னிடத்தில்
நின்றிலே— (கலந்து) நின்றதில்லை
எனின்—என்பீராயின்,
அம் மலத்திரிவும்— (என்னைவிட்டு) அம்மலங்கள் நீங்குதலும்,
(நான் உமது)
செம்மலர்த்தாள் நிழல்—செந்தாமரை மலர்போலுந் திருவடி யின்
சேர்தலும்—நுகர்தலும் [பத்தை
இலவாய்—இல்லையாகி,
சார்பவை— (என்னைப் பந்தித்த)அம்மலங்களிலேயே
பற்றி—அழுந்தி
பெயர்வு இலன் ஆகும்—மீளுதலில்லாதவனாவேன்.
தீர்வு—(இது) நிச்சயம்.
(நிற்க, எனக்கு)
இன்று—இம் முத்தியில்
அமைந்த—பொருந்திய
கருமத்து—(பிராரத்த)கருமத்தின்
இயைந்தவை அல்லது—அநுபவமட்டும் உள்ளதன்றி
சமைந்தன—ஆகாமியங்கள்
இல என—ஏறு வென்று
சாற்றின்—சொல்லுவீராயின்,
அமைந்த—(பிராரத்தமாக)வந்த
மாயேயம்—தேககாரணமான மாயையும்,
கன்மம்—கன்மமும்,
மாமலம்—மிகக்கொடிய ஆணவமும்
மூன்றும்— (என்னும்) இம்மூன்று மலங்களும்
மாயாது— (என்னைவிட்டு) நீங்குதற்கு ஏதுவில்லை.
ஆகவே—ஆகையால்,
ஆர்ச்சநம்—(எனக்கு) ஆகாமியமும் (நிச்சயமாகவே யுண்டாகி)
மாயையின்—மாயையினின்றும்
உற்பவம்—காரியமாகுஞ் சரீரபந்தமும்
தீராது—விடாமல்
ஒழுகும்—தொடர்ந்துகொண்டே வரும்.
(இச்சரீர பந்தம்)
ஒன்று ஒன்றினில்—புண்ணியபாவங்கள் தம்மில்

சமம் ஆயின் அல்லது—ஒத்தாலொழிய
நிற்பெறல்—(நான்) உம்மையடைதல்
இல் என—முடியாதென்று
மொழிந்த—கூறிய
தொல் அறந்தனக்கும்—அநாதியான ஆகமவசனத்துக்கும்
ஏயாது ஆகும்—பொருந்தாதாகும்.
(ஆகையால், பெத்தத்தில் நீர்)
நாயேன் உளத்து—எனது ஆன்மாவில்
நின்றனை—(விரவி) யிருக்கின்றீர்
என்பனோ—என்று(நான்) சொல்லட்டுமா?
நின்றிலை—(விரவி) யிருக்கின்றிலீர்
என்பனோ—என்று (நான்) சொல்லட்டுமா?
(அப்படியே முத்தியில் என்னைவிட்டு)
மலம்—மும்மலங்களும்
பொன்றிய (என்பனோ) —நீங்கிவிட்டன (என்று நான்சொல்லட்டு
பொன்றிற்றில—நீங்கினதில்லை [மா?)
என்பனோ—என்று (நான்) சொல்லட்டுமா?
ஒன்றினை—தக்கவிடையை
மன்ற—தெளிவாக
உரைத்தருள்—கூறியருளுக.

பெத்தம் மலசம்பந்தமாகலின் அசுத்தம். அவ்வசுத்த சம்பந்தியாகிய ஆன்மாவில் சுத்தப் பொருளாகிய சிவம் கலந்து நிற்றல் முடியாது. நில்லாவிடில் அவ் வான்மாவுக்கு மலநீக்கமும், வீடுபேறும் எய்தா. ஆகவே, பெத்தான்மாவில் சிவம் கலந்து நிற்குமா? இல்லையா?

முத்தான்மாவுக்குப் பிராரத்தம் நீங்கும்வரை சரீரம் இருந்தே தீரும். ஆனால், ஆகாமியம் ஏறாதென்று சொல்லப்படுகின்றது. சரீரமுளதாயின் அதற்குக் காரணமாகிய மாயையும் அதனைவிட்டு நீங்குவதில்லை. இல்லையாகவே, அதன்கண் இன்பத்துன்ப நுகர்ச்சிக்கும், தொழிற்பாட்டுக்கும் ஏதுவாய கன்மமும், அவ்விரண்டையு மியைவிக்கும் ஆணவமும் உளவாதல் கூடும். ஆகாமியமும் ஏறத் தடையில்லையாய்ப் பிறப்பிறப்புக்களும் வந்தெய்தும். ஆகவே, முத்தான்மாவில் மலங்கள் நீங்கி நிற்குமா? இல்லையா?

ஈண்டு முத்தியென்றது ஜீவன் முத்தியை.

இங்ஙனம் முத்தான்மாவுக்கு மும்மலங்களு முளவென்பது, ஆன்மா தனது இருவினையொப்பில் பிறப்பிறப்பினை நீங்கி வீட்டைச்சாரு மென்னுஞ் சுருதியோடு முரணவில்லையா?

11. மதிநின்பா லிந்த மலத்தின்பா னிற்க
விதியென்கொல் வெண்ணைவாழ் மெய்ய—பதிநின்பால்
வந்தா லிதில்வரத்தில் வந்திரண்டும் பற்றுகிலே
னெந்தா யிரண்டாமா றெண்.

வெண்ணைவாழ்—திருவெண்ணெய் நல்லூரில் வாழ்கின்ற
மெய்ய—மெய்கண்ட தேவரே!
பதி—அரசரே!
எந்தாய்—எனது தந்தையே!
நின்பால்—உம்மிடத்தில்
மதி—ஞானம் (உளதாக)
(நான் அதனை விடுத்து)
இந்த மலத்தின்பால்—இம் மலத்தில்
நிற்க—அகப்பட் டறிவை யிழக்க
விதி என்—காரண மென்ன?
நின்பால் வந்தால்—உம்மை யடைந்தேனுயின்
இதில்—இம் மலத்திற்கு
வரத்து இல்—மீளமாட்டேன்.
(ஆனல்)
இரண்டும்—உம்மையும் மலத்தையும்
வந்து—(ஒரேசமயத்திற்) சென்று
பற்றுகிலேன்—சாரவுமாட்டேன்.
(அங்ஙனமாயின் நான்)
இரண்டு ஆம் ஆறு—உம்மையும் மலத்தையுஞ் சாரும் விதத்தை
எண்—திருவுளம் பற்றியருளுக.

ஆன்மா சிவத்தையும் மலத்தையும் ஒருங்கே சாராது. ஆனல், அது சிவத்தோடு சார்ந்து ஞானத்தையும், மலத்தோடு சார்ந்து அஞ்ஞானத்தையும் எய்துகின்றது. இரண்டையு மொருங்கே சாரமாட்டாத அது ஒவ்வொன்றையுந் தனித்தனி சாருவ தெப்படி?

---

12. எண்டிசை விளங்க விருட்படாம் போக்கி
முண்டக மலர்த்தி மூதறி வருளு
மேதினி யுதய மெய்கண்ட தேவ
கோதி லமுத குணப்பெருங் குன்ற
வென்னி ஞர்தலு மகறலு மென்னைகொ

லுன்னிற் றுன்னி யுணுவிடிற் பெயர்குவ
மென்னு மதுவே நின்னியல் பெனினே
வியங்கோ ளாள னு மாகி யியங்க லு
முண்டெனப் படுவை யெண்டோண் முக்கண்
யாங்கணும் பிரியா தோங்குநின் னிலையின்
யான்வந் தணைந்து மீள்குவ னுயி
ருற்றுத் துயருற் றோரணி நிழனசைஇ
வீற்றுவீற் றெழுதர வேண்ட லும் வெ றுத்த லு
மின்றிச் சாயைக்கு நன் றுமன் னியல்பே
யனையை யாகுவை நினைவருங் காலை
யிந்நிலை யதனி னேழையேற் கிரங்கி
நின்னை வெளிப்படுத் தொளிப்பை நீயே
லருண்மா ருகும் பெருமவஃ தன் றியு
நிற்பெற் றவர்க்கு முற்பவ முண்டெனுஞ்
சொற்பெறு மஃதித் தொல் லுல கில்லை
யவ்வவ் வமைவுஞ் சோர்வு மயர்வறச்
சொல்லிற் சொல்லெதிர் சொல்லாச்
சொல்லே சொல் லுக சொல்லிறந் தோயே.

மேதினி—உலகத்தில்
இருள் படாம்— (ஆணவ) இருளென்னும் போர்வையை
போக்கி—நீக்கி
முண்டகம்—(இருதய) தாமரையை
மலர்த்தி—மலரச் செய்து
எண் திசை—எட்டுத்திசைப் (பொருள்களும்)
விளங்க— தெரியும்படி
மூதறிவு அருளும்—பேரறிவைக் கொடுக்கின்ற
உதய—(ஞான) சூரியனே!
மெய்கண்டதேவ—மெய்கண்டதேவரே!
கோது இல் அமுத—குற்றமில்லாத அமிர்தத்தை யொத்தவரே!
பெருங் குணக் குன்ற-பெருங்குணங்களால் மலைபோ லுயர்ந்தவரே!
பெரும—பெருமானே!
சொல் இறந்தோயே—எவ்வகைச்சொற்களுக்கு மடங்காத புகழை (நீர்) [யுடையவரே;
என்னின்—என்னிடத்தில்

ஆர்தலும்—தங்குதலும்
அகறலும்—(என்னைவிட்டு) விலகுதலும்
என்னை—எப்படி?
உன்னில்—"(யாரேனும் எம்மை) நினைப்பதாயின்
துன்னி—(யாம் அவர்பால்) வருதலும்,
உனுவிடில்—நினையாவிடில்
பெயர்குவம்—(அவரைவிட்டு) விலகுதலுஞ் செய்வோம்"
என்னுமதுவே—என்பதே
நின் இயல்பு—உமதியல்பாகும்
எனின்—என்பீராயின்,

(நீர் பிறரது)

வியங்கோளாளனும் ஆகி—ஏவலுக் கடங்கினவராய்
இயங்கலும் உண்டு எனப்படுவை—சலனமும் உடையவரெனக் கருதப்படுவீர்.

(நிற்க)

எண் தோள்—எட்டுத்தோள்கள்,
முக்கண்—மூன்று கண்கள் (முதலிய அருளடையாளங்கள்)
யாங்கணும்—எந்த இடத்தையும் விட்டு
பிரியாது—விலகாமல்
ஓங்கு—விளங்குகின்ற
நின் நிலையின்—உமது வியாபகத்தில்
யான் வந்து—நானே வந்து
அணைந்து—சேர்தலும்,
மீள்குவனுயின்—விலகுதலுஞ் செய்வேனுயின்,

(அதுவும் பொருந்தாது. எப்படியெனில்)

ஆற்றுத் துயர்—வழிநடையாற் களைப்பை
உற்றோர்—அடைந்தவர்
அணி நிழல்—பக்கத்திலுள்ள நிழலை
நசைஇ—விரும்பிச் (சென்று)
வீற்றுவீற்று—தனித்தனி
எழுதர—(களைப்பு நீக்கத்தின் பிறகு) விலகினுல்
வேண்டலும்—(தங்கியதற்கு) மகிழ்தலும்
வெறுத்தலும்—(விலகியதற்கு) வருந்துதலும்
இச் சாயைக்கு—அந்நிழலுக்கு
இன்று—இல்லை.
அனையை ஆகுவை—(நீரும்) அந்நிழலுக்குச் சமானர் ஆவீர்.

(அங்ஙனமாயின் நான் சார்வதால் மகிழ்ச்சியும், பிரிவதால் வருத்தமும் அடைய மாட்டாத)
மன் இயல்பு—உமதியல்புஞ் (சடமெனப் பட்டு)
நன்று—நன்றாயிருக்கிறது (ஒழியும் என்பது கருத்து).
(இனி)
இந்நிலையதனின்—(எனது) இப் பரிதாப நிலையில்
நினைவருங்காலை—(நான்)தியானிக்கும்போது
ஏழையேற்கு—எனக்கு
இரங்கி—தயைகூர்ந்து
நீ—நீர்
நின்னை—உம்மை
வெளிப்படுத்து—காட்டுதலும்,
ஒளிப்பையேல்—(தியானியாதபோது)மறைத்தலுஞ்செய்வீராயின்,
(அச்செய்கையும்)
அருள் மாறு ஆகும்—(உமது)அருளுக்குப் பொருந்தாதாகும்.
அஃது அன்றியும்—அதுவுமல்லாமல்
நிற்பெற்றவர்க்கும்—உம்மைக்கண்ட ஸ்ரீமான்களுக்குங்கூட
உற்பவம் உண்டு—பிறப்புண்டு
எனும் சொல்—என்னும்(அபவாதச்) சொல்லும்
பெறும்—வந்துவிடும்.
அஃது—(ஆனால்)அவ்வபவாதம்
இத் தொல் உலகு—இந்தப் பழமையாகிய வுலகத்தில்
இல்லை—இல்லவு மில்லை.
(இவ்வினாவுக்கு நீர்)
அவ்வவ்வமைவும்—விடைகள் முழுவதையும்
சோர்வு—சலிப்பு,
மயர்வு—மயக்கம் (முதலியன)
அற—(எனக்கு) நீங்கும்படி.
சொல்லில்—சொல்லவிரும்புவீராயின்,
எதிர் சொல்—(நான்) மேலும் வினாக்களை
சொல்லா—நிகழ்த்துதற்கு இடந்தராத
சொல்லே—(தெளிவான) விடைகளையே
சொல்லுக—சொல்லியருளுக.

சிவபிரான் வேறோரிடத்தி லிருந்துகொண்டு, ஆன்மாக்கள் நினைக்கும்போது அவைகள்பால் வருதலும், நினையாதபோது வாராமையுஞ்செய்வானாயின், ஆன்மாக்கள் 'எம்பால் வருக' வென ஏவுந் தலைவரும், அவன்

'இதோ வந்துவிட்டேன்' என்று அவ்வேவலுக் கடங்கும் பணியாளனு மாவர். 'அன்றியும், அவனுக்குப் புடைபெயர்ச்சி யேற்பட்டு 'நிச்சலன்' என்ற பெயரும் பொய்யாம்.

ஆன்மாக்களே அவனிருக்கு மிடத்துக் கேகலு மீளலுஞ் செய்யுமா யின், தன்பா லேகு மான்மாக்களை நோக்கி மகிழ்தலும், தன்னைவிட்டு மீளு மான்மாக்களை நோக்கி வருந்துதலும் நிழலுக்குப் போன்று அவனுக்கு மில்லையாகும். ஆகவே, அவனுஞ் சடமே. இன்னும், ஏகுதல் மீளுதலா கிய சுதந்திரம் ஆன்மாக்களுக்கே யுளதெனப்பட்டு நிழலுக்குப்போன்று அவனுக்கு மஃதின்றாம்.

சிவபிரான் ஆன்மாக்களிற் றங்கியே யிருப்ப, அவைகள் தியானிக்குங் கால் வெளிப்படுவதும், இல்லாக்கால் மறைந்துகொள்வதும் அவனுக் கியல்பாயின், அவனை யொருதரமாயினுந் தரிசித்த ஆன்மாக்களுக்குப் பிறப் பிறப்புக்கள் கூடா. வெளிப்பட்டவன் திரும்பவு மறைவானாயின் அவ னைத் தரிசித்த ஆன்மாக்களுக்கும் அவை வருவது திண்ணம். ஆகவே, சிவபிரானைக்கண்ட ஆன்மாக்களுக்குப் பிறப்பிறப்புத் துன்பமில்லை யென் னும் வேதவாக்குப் பொய்யாகி உண்டென்னுங் கடுமொழியே பிறந்துவிடும்.

அப்படியாயின், சிவபிரான் ஆன்மாக்களிற் றங்கி நிற்றல், விலகி நிற் றல் என்பவற்றிற்குப் பொருளென்ன?

---

13. இறந்தோய் கரணங்க ளெல்லா மெனக்குச்
சிறந்தோ யெனினுமெய்த் தேவே—பிறந்துடனாங்
காயங் கொளவுங் கொளாமலுங் கண்டதுநீ
யாயன்கொல் பாதவத் தற்று.

கரணங்கள் எல்லாம்—(கருவி) கரணங்களொன்றும்
இறந்தோய்—இல்லாதவரே!
மெய்த்தேவே—மெய்கண்டதேவரே!
எனக்கு—எனக்கு
உடன்பிறந்து—என்னோடு பிறந்து
ஆம்—உபகரிக்கின்ற
காயம்—உடம்பை
நீ—நீரே
சிறந்தோய் எனினும்—தந்து உபகரித்தவராயிருந்தும்
கொளவும்—(முதலில் அதனை அடியேன் மெய்யாகக்) கொள்ளவும்
கொளாமலும்—(பிறகு அவ்வாறு) கொள்ளாமற் (பொய்யாகத் தள்ளவும்)
கண்டது—(தேவரீர்) செய்த தன்மை

ஆயன் கொல்—இடையன் வெட்டின
பாதவத்து அற்று—மரம் (முதலில் பச்சையாயிருந்து பிறகு காய்வது) போன்றது. (அஃதெப்படி?)

அநுக்கிரகத்தைப் பெறுமுன் ஆன்மா உடம்பை மெய்யென்றிருந்தது. அதனைப் பெற்றபின் ஆன்மா உடம்பி லிருந்துகொண்டே அதனைப் பொய்யென்று கண்டு நீங்குகிறது. அஃதெப்படி?

---

14. அற்றதென் பாச முற்றதுன் கழலே
யருட்டுறை யுறையும் பொருட்சுவை நாத
வேறென் றிருந்த வென்னை யான்பெற
வேறின்மை கண்ட மெய்கண்ட தேவ
விருவினை யென்ப தென்னைகொ லருளிய
மனமே காயம் வாக்கெனு மூன்றி
னிதமே யகித மெனுமிவை யாயிற்
கணத்திடை யழியுந் தினைத்துணை யாகா
காரணஞ் சடமதன் காரிய மஃதா
லாரணங் காம்வழி யடியேற் கென்னைகொல்
செயலென தாயினற் செயலே வாரா
தியமன் செய்தி யதற்கெனி னமைவும்
பின்னையின் றுகு மன்னது மிங்குச்
செய்திக் குள்ள செயலவை யருத்தின்
மையறிரி யமற்கு வழக்கிலை மன்ன
வொருவரே யமையு மொருவா வொருவற்
கிருவரும் வேண்டா விறைவனு நின்றனை
தின்னது கருணை சொல்லள வின்றே
யமைத்தது துய்ப்பி னெமக்கணை வின்று
முள்ளது போகா தில்லது வாரா
துள்ளதே யுள்ள தெனுமுறை யதனாற்
கொள்ளும் வகையாற் கொடுத்திடு மாயின்
வள்ளன் மையெலா முன்னிட வமையு
மீய வேண்டு மெனும்விதி யின்று
மாயினு மென்னை யருந்துயர்ப் படுத்தல்
நாயி னேற்கு நன்றுமன் மாயக்

கருமமுங் கரும பந்தமுந்
தெருள வருளு சிவபெரு மானே.

அருட்டுறை—திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருவருட்டுறையி[லே
உறையும்—எழுந்தருளியிருக்கின்ற
பொருள் சுவை நாத—ஞானனந்தத் தலைவரே!
வேறு என்று இருந்த—(இதுவரைத் தம்மின்) வேறாயிருந்த
என்னை—என்னை
யான் பெற—என்னுண்மையழியாமல்
வேறு இன்மை கண்ட—தாமாக்கிக்கொண்ட
மெய்கண்டதேவ—மெய்கண்டதேவரே!
மன்ன—ஞானராஜரே!
ஒருவா—ஒப்பற்றவரே!
சிவபெருமானே—சிவபெருமானே!
அற்றது—(என்னைவிட்டு) நீங்கினவை
என்பாசம்—எனது மலங்கள்.
உற்றது—(நான்) அடைந்தது
உன்கழல்—உமது திருவடியை.

(ஆனல் எனக்கொரு சந்தேக முளது. அஃதாவது)

இருவினை என்பது—இருவினையென்று செல்லப்படுவது
என்னை—எது? (என்பதே).
அருளிய—(நீர்) தந்த
மனம் வாக்கு காயம் எனும்—மனம் மொழி மெய்யென்ற
மூன்றின்—மூன்று கரணங்களாலும்

(நான் செய்கின்ற)

இதம்—நல்வினை,
அகிதம்—தீவினை
எனும் இவை—என்னு மிவ்விரண்டுமே
ஆயின்—(இருவினை) யென்பீராயின்,

(அவை தோன்றி)

கணத்திடை—நொடிப்பொழுதில்
அழியும்—அழிந்துவிடும்; (மறுகணத்தில்)
தினைத்துணை—கொஞ்சமேனும்
ஆகா—சீவித்திரா.

(இன்னும்)

காரணம்—காரணமாகிய திரிகரணங்களும்
சடம்— சடம் (ஆகலின்)
அதன் காரியம்—அவற்றின் காரியமாகிய தொழில்களும்
அஃது—சடமே.

(அங்ஙனமாக அத்தொழில்கள் தாமேவந்து)

அடியேற்கு—எனக்கு
ஆர் அணங்கு—பெரியபந்தம்
ஆம் வழி என்னை—ஆகும் விதமெப்படி?
(இனி, கரணங்கள் தொழிற்படுவதே என்னுலாகையால்),
செயல்—எல்லா வினைகளும்
எனதாயின்—என்னுடையனவே யென்பீராயின்,
நல் செயலே—(என்பால்) நல்லவினைகள் மட்டும்
வாராது—நிகழாமல்
இயமன் செய்தியதற்கு—யம தண்டனையைத் தருந் தீவினைகளும் [நிகழ
என்—(காரணம்) என்னை?
பின்னை—தவிர
நின் அமைவும்— நீர் இருப்பதும்
இன்றாகும்—உபயோக மற்றதாகும்.
அன்னதும்—நீர் இருப்பதும்
இங்கு—(நான்) இப்பிறப்பிற் (செய்த)
செய்திக்கு—வினைக்கு
உள்ள செயலவை—உரியபயனை
அருத்தின்—(எனக்கு மறுபிறப்பில்) ஊட்டுதற்காம்(என்பீராயின்),

(அதனை யூட்டுதற்கு)

மையல் திரி—மயக்கம் நீங்கிய
யமற்கு—யமனு மிருப்பது
வழக்கு இலை—அவசியமில்லை.

(ஏனெனில்)

ஒருவற்கு—ஒருவனுகிய என்னை யுண்பிக்க
ஒருவரே—ஒருதெய்வமே
அமையும்—போதும்;
இருவரும்—(நீரும் யமனுமாக) இருவரும்
வேண்டா—வேண்டியதில்லை (யென்க).

(இருவருமே வேண்டுமாயின் நீர்)

இறைவனும்—இறைவனென்னும் பெயருக்கு
நின்றனே—தகுதியற்றவரு மாவீர்.

(நிற்க)

அமைத்தது—(எனது) பிராரத்தத்தை
துய்ப்பின்—(நான்) அனுபவிக்கும்போது
எமக்கு—எனக்கு (ஆகாமியம்)
அணைவு இன்ரும்—உண்டாதவில்லை.

(ஏனெனில்)

உள்ளது—உள்பொருள்
போகாது—(ஒருக்காலும் இல்பொருளாய்) ஒழியாது;
இல்லது—இல்பொருள்
வாராது—(ஒருக்காலும் உள்பொருளாய்த்) தோன்ருது;
உள்ளதே—உள்பொருளே
உள்ளது—தோன்று மியல்பை யுடையது
எனும் உரையதனல்—என்னுஞ் சற்காரிய வாதத்தினல் (என்க).

(ஆனல்)

கொள்ளும் வகையால்—(நான்பிராரத்தத்தை) அனுபவிக்கும் வாயி [லாய்
கொடுத்திடும் ஆயின்—(நீரே ஆகாமியத்தையென்னேடு) இயைவிப்
நின்னது கருணை—உமதுகருணை [பீராயின்,
சொல் அளவு இன்றே—சொல்லுக்கடங்காத பெருமையையுடைய [தல்லவா?
வள்ளன்மை எலாம்—அக்கருணை (முதலிய உமது பிரதாபங்களை) [யெல்லாம்
உன்னிட அமையும்—(நான்)நினைத்துக்கொண்டிருப்பதேபோதும்.

(அங்ஙனமின்றி ஆகாமியம் ஏறுதற்கேற்ப)

ஈயவேண்டும் எனும்—ஈதல்வேண்டும் என்பது முதலிய
விதி—விதிகளையும்

(எனக்கென்று நீர் வேதத்தில்)

இன்ரும்—அருள வேண்டியதில்லை.
ஆயினும்—(ஏது எங்ஙனம்)ஆயினும்
என்னை அருர் துயர்ப்படுத்தல்—என்னைப்பெருந்துயரத்திலழுத்தி
நன்று மன்—மிகவும் நன்ருயிருக்கிறது. [யது
மாயக் கருமமும்—கொடிய இருவினைகளின் உண்மையையும்

கரும பந்தமும்—அவைகள் என்னைப் பந்தித்த விதத்தையும்
தெருள—(நான் மிகத்தெளிவாகத்) தெரிந்துகொள்ளும்படி
நாயினேற்கு—எனக்கு
அருளு—சொல்லியருளுக.

மனவாக்குக் காயமென்னு மூன்று கரணங்களினின்றும் முறையே நினைத்தல், பேசுதல், செய்தலென்னுந் தொழில்களுண்டாகின்றன. இவைகளே நல்வினைகளுந் தீவினைகளுமாய் நின்று ஆன்மாவைப் பந்திக்குமாயின், இவையெல்லாம் அவ்வப்போது தோன்றி அவ்வப்போதே அழிவனவாயிருக்கும். அங்ஙனமாக இவை ஆன்மாவுக்குப் பயன்தரும் வரை நீடு நிற்பதும், பந்தமாவது மெப்படி?

கரணங்களாகிய சடத்தினின்றும் உண்டான தொழில்கள் தாமுஞ் சடமாகலின் வினைமுதலாக நின்று ஆன்மாவைப் பந்திப்பதெப்படி?

அவை கரணங்களின் தொழில்க ளல்லவாய், அக்கரணங்களை யியக்கும் ஆன்மாவின் தொழில்களாமாயின், அவ்வான்மா நல்வினைகளைச் செய்வதோடமையாமல், தீவினைகளையுஞ் செய்வதேன்?

ஆன்மாவுந் தானே வினைகளைச் செய்துகொள்ள வல்லதாயின் இறைவனிருப்ப தெற்றுக்கு?

ஆன்மாவுக்குப் பிராரத்தத்தை யூட்டுதற் பொருட்டவ னிருப்பதாயின் அதற்கு யமனிருக்கின்றான். ஆகலின், இறைவனு மிருப்பது மிகையல்லவா?

இருவருமே வேண்டுமாயின் இறைவனது முழுமுதன்மை கெடாதா?

இல்பொருள் ஒருக்காலுந் தோன்றாது. உள்பொருளே தோன்றும். இது சற்காரியவாதம். ஆன்மா பிராரத்தத்தைப் புசிக்கும்போது அதற்குப் புதுவினை யேறுவதாயின் அப் புதுவினை முன்னரில்லாததாய்ப் பின்னர்த் தோன்றுதல் வேண்டும். இது சற்காரியவாத விரோதமல்லவா? அஃதெப்பொழுதுமே யுள்ளதாயின், புதுவினை யென்னும் பெயர் பெறுவதேன்?

புதுவினையென்ப தாகாமியம்.

ஆன்மா பிராரத்தத்தை யனுபவிக்கும் வாயிலாய் அதற்கு ஆகாமியத்தைச் சிவபெருமானே யியைவிப்பானாயின் அஃதொன்றே போதும். ஆன்மா அவனை நினைத்துக்கொண்டிருப்பதோ டமையாமல் தானாகவும் ஆகாமியத்தை யீட்டிக்கொள்ளுதல் வேண்டா. ஆனால், வேதத்தில் 'தானஞ் செய்க; தருமஞ்செய்க' எனப் பல விதிகள் ஏற்பட்டுள்ளன. ஆன்மா அவைகளைச் செய்தல்வேண்டும். செய்யின் அஃது ஆகாமியத்தைத் தானாகவும் ஈட்டிக்கொள்ளுகின்றது. இவ்வாறு ஆகாமியத்தைப் பயக்கும் விதிகளும் அவைகளை யான்மாச் செய்தலு மெற்றுக்கு?

15. மானமருஞ் செங்கை மதில்வெண்ணே வாழ்மன்ன
போனவினே தானே பொருந்துமோ—யானதனி
லாவனே வாக்கா யமலனு நின்னருடான்
றேவனே யாதுக்கோ தேர்.

மான் அமரும்—மான் தங்கிய
செங்கை—சிவந்த கையையுடையவரும்,
மதில் வெண்ணே—மதில்சூழ்ந்த திருவெண்ணெய் நல்லூரில்
வாழ்—வாழ்கின்றவரும் (ஆகிய)
மன்ன—அரசரே!
தேவனே—ஒளிமயமானவரே!
போனவினே—(எனது) முன்வினே
தானே—தானே(வலிய வந்து)
பொருந்துமோ—(எனக்கனுபவமாய்ப்) பொருந்துமா?
(அல்லது)
யான்—நானே (வலியச் சென்று)
அதனில்—அவ்வினேயை
ஆவனே—எடுத்தனுபவிப்பேனு?
(அல்லது நீரே எனக்கவ் வினேயைப் புசிப்பிப்பீரா?)
ஆக்காய்—(நீரும்) ஊட்டமாட்டீர்(ஆயின்)
அமலன் ஆம்—மலமற்றவராகிய
நின் அருள் தான்—உமதருளால் வந்த தனு கரண புவன போகங்கள்
யாதுக்கு—இருப்பதெதன் பொருட்டு?
தேர்—திருவுளங்கொண்டருளுக.

செய்தவினே தானுகவே ஆன்மாவுக் கனுபவமாய் வருமா? அல்லது, ஆன்மா அவ்வினேயைத் தானுகவே போய்ப் புசிக்குமா? அல்லது, இறைவனே அவ்வினேயை ஆன்மாவுக்குப் புசிக்கக்கொடுப்பானு? இவ்வளவு மில்லேயாயின் தனுகரண புவனபோகங்கள் உண்டாயிருப்பதேன்?

---

16. தோரா துரைப்பன் றெருமா ளுளத்தொடு
போரா தருளுதல் பெரியோர் கடனே
நின்னேக் கலப்ப தென்னுண் மையெனின்
நின்னது நேர்மை சொன்மனத் தின்றே
யெழுவகைத் தாதுவி னெழுதுளே யிரண்டு
பெருமுழைக் குரம்பையிற் பெய்தகத் தடக்கி
நீக்கி யென்றனேப் போக்கற நிறுத்தி

யிச்சை முதலிய வெழுப்பி நடத்திடும்
விச்சை சாலவும் வியப்பது நிற்க
வாக்கு மனமும் போக்குள தநுவுஞ்
சொல்லு நினைவுஞ் செய்யுஞ் செயலு
நல்லவுந் தீயவு மெல்லா மறிந்து
முறைபிற ழாமற் குறைவுநிறை வின்றாய்க்
காலமுந் தேசமு மாலற வகுத்து
நடுவுநின் றருத்தலி னடுவனு குதியே
சான்றோர் செய்தி மான்றிருப் பின்றே
சாலார் செயலே மாலா குவதே
யத்துவா மெத்தி யடங்கா வினைகளுஞ்
சுத்திசெய் தனையே யொத்தகன் மத்திடை
நீங்கின வெண்ணெ யூங்கூழ் வினைகளு
மாங்கவை யருத்துவ தாரைகொ லதனாற்
கரும மருத்துங் கடனது வின்றாந்
தருமம் புரத்தல் பெருமைய தன்றே
கண்ணினுண் மணிய கருத்தினுட் கருத்த
வெண்ணெ வேந்த மெய்கண்ட தேவ
விடர்ப்படு குரம்பையு ளிருத்தித்
துடைப்பதில் லாவரு டோன்றிடச் சொல்லே.

கண்ணினுள் மணிய—கண்மணியே!
கருத்தினுள் கருத்த—அறிவுக்கறிவாயுள்ளவரே!
வெண்ணெ வேந்த—திருவெண்ணெய் நல்லூர்க்கரசரே!
மெய்கண்டதேவ—மெய்கண்டதேவரே!
சான்றோர் செய்தி—பெரியோர்களறிவு
மான்று இருப்பின்று—மயக்கதோடிராது.
சாலார் செயலே—சிறியோர்களறிவே
மால் ஆகுவது—மயக்கத்தோடிருப்பது.
பேராது—சலிப்பின்றி
அருளுதல்—(சந்தேக நிவர்த்தி) செய்தல்
பெரியோர் கடன்—பெரியோர்களி னியல்பாகும்.

(ஆகவின், இச் சாலாரு ளொருவனாகிய நான்)

தெருமரல் உளத்தொடு—கலக்கமான அறிவோடு
தேராது—(அது) தெளியமாட்டாமல்

உரைப்பன்—(சிலவற்றை உம்மிடம்) வினவுகின்றேன்.

(அவை வருமாறு)

நின்னைக் கலப்பது—(நான்)உம்மைக் கலப்பதே

என் உண்மை எனின்—எனதியல் பென்பீராயின்,

நின்னது நேர்மை—உமதியல்பு

சொல் மனத்து இன்றே—(எனது) வாக்கு மனங்களி லடங்காதே.

(அங்ஙனமாயின் நான் கலப்பதெப்படி? இன்னும் எனது)

இச்சை முதலிய—இச்சை முதலிய (சக்திகளை)

எழுப்பி—விளக்கி

என்றனை—என்னை

எழுவகைத் தாதுவின்—ஏழுவகைப்பட்ட தாதுக்களாலும்,

எழு துளை—ஏழு (சிறிய) துவாரங்களாலும்,

இரண்டு பெருமுழை—இரண்டுபெரிய துவாரங்களாலும்(இயன்ற)

குரம்பையில்—உடம்பில்

பெய்து—புகுத்தி

அகத்து அடக்கி—அதனுள்ளே யடைத்து

போக்கு அற—வெளிப்படாதவாறு

நிறுத்தி—தடுத்தும்

நீக்கி—(மரணத்தில் அதனைவிட்டுப்) பிரித்தும் (இவ்வாறு)

நடத்திடும்—பிறப்பிறப்பிற் படுத்துகின்ற

விச்சை—(உமது) சாமர்த்தியம்

சாலவும் வியப்பு—மிகவும் ஆச்சரியமாக விருக்கின்றது.

அது நிற்க—அஃதிருக்கட்டும் (இனி),

போக்கு உள—வரைகடந் தியங்குதலை யுடைய

வாக்கும்—வாக்கும்,

மனமும்—மனமும்,

தநுவும்—காயமும் (முறையே)

செய்யும்—செய்கின்ற

சொல்லும்—சொல்லிலும்,

நினைவும்—நினைவிலும்,

செயலும்—செயலிலும் (உள்ள)

நல்லவும்—நல்லவைகளும்,

தீயவும்—தீயவைகளும் (ஆகிய)

எல்லாம்—எல்லாவற்றையும்

அறிந்து—தெரிந்து

(அவற்றின் அனுபவத்துக்கு வேண்டப்படும்)

காலமும்—காலத்தையும்,
தேசமும்—இடத்தையும்
மால் அற—குற்றமில்லாமல்
வகுத்து—உண்டாக்கி
(அவ்வினைகளை யெனக்கு)
முறை பிறழாமல்—(ஒருவர் வினையை மற்றவ ரனுபவித்த லென்
[னும்) முறைத்தவ றில்லாமலும்
குறைவு நிறைவு இன்றாய்—(குறைந்த அநுபவம், மிஞ்சிய அநுபவ
[மென்னும்) அளவுத் தவறில்லாமலும்
நடுவு நின்று—நடுவுநிலையி லிருந்துகொண்டு
அருத்தலின்—அநுபவிக்கக் கொடுத்தலின்
நடுவன் ஆகுதி—(நீர்) நீதிபதி யாகின்றீர்.

(ஆனால்)

ஒத்த கன்மத்திடை—(எனது) இருவினை யொப்பில்
அத்துவா மெத்தி—(ஆறு) அத்துவாக்களிலும் நிறைந்து
அடங்கா—அநுபவத்துக்கு வாராத
வினைகளும்—சஞ்சிதங்களையும்
சுத்திசெய்தனை—(எனக்கு) நீக்கினீர்.
ஊழ்வினைகளும்—பிராரத்தங்களும்
ஊங்கு—இவ்வுடலூழாய்
என்னை நீங்கின—என்னை விட்டு நீங்கின.
(ஆகாமியங்களையும் நீரே ஏன்றுகொண்டீர். அங்ஙனமாக நீர்)
அவை—அவ்வினைகளை
ஆரை—யாருக்கு
அருத்துவது—புசிப்பிக்கின்றீர்?
அதனால்—ஆகையால்
கருமம்—வினைகளை
அருத்துங் கடன்—(எனக்குப்) புசிப்பிக்கின்ற முறை
இன்றாம்—(உம்மிடம்) இல்லையாகும்;
தருமம் புரத்தல்—(உமது) தர்மரக்ஷணமும்
பெருமையது அன்று—சிறப்பைத் தரவில்லை.

(ஆகலின் நீர் என்னை)

இடர்ப்படு குரம்பையுள்—துன்பத்திற் கிடமாகிய வுடம்பில்
இருத்தி—புகுத்தி
துடைப்பதில்—(கருமத்தைப்) புசிப்பிப்பதில்
ஆ அருள்—இருக்கும் நியாயத்தை

தோன்றிட— (எனக்கு) விளங்கும்படி
சொல்—சொல்லியருளுக.

ஏழு தாதுக்கள்:—நரம்பு, எலும்பு, மூளை, தசை, தோல், இரத்தம், சுக்கிலம்.

ஆறத்துவாக்கள்:—மந்திரம், பதம், வன்னம், புவனம், தத்துவம், கலை.

ஆன்மாக்கள் தமக்கெவ்வகையிலும் அகப்படாத சிவத்திற் கலந்து நிற்பதெப்படி?

பொருள் வேறுபட்டா லன்றிப் பொருளியல்பு வேறுபடுவதில்லை. சிவத்தோடு கலந்துநிற்றல் ஆன்மாக்களுக் கியல்பாயின், சிவபிரான் சரீர பந்தத்தைக் கொடுத்து அவைகளை விலகி நிற்கச் செய்வதெப்படி?

சரீரங் கொடுக்கப்பட்டது ஆன்மாக்கள் அதனைப் பெற்றுத் தமது கன்மத்தைப் புசித்தொழித்தற் பொருட்டாயின், கன்மத்தை நீக்குதற்குச் சரீரம் இன்றியமையாது வேண்டப்படுமென்பது சித்திக்கும். ஆனால், இருவினையொப்பு வந்த ஆன்மாக்களுக்குமட்டும் சஞ்சிதம் தீக்ஷையாலும், பிராரத்தம் எடுத்தவுடல் நுகர்ச்சியாலும், ஆகாமியம் இறைவன் ஏன்று கொள்ளுதலாலும் நசிக்கின்றன. இவ் வான்மாக்களுக்கு உடம்பிருந்துங் கன்ம நீங்குதற்கண் சிறிதும் உபகரித்தலில்லை. ஆகவே, சில வான்மாக்களுக்குக் கன்ம நசித்தற்கெனச் சரீரபந்தத்தைக் கொடுத்து அவைகளை யிடைவிடாத துன்பத்திலாழ்த்தியும், சிலவான்மாக்களுக்கு அப் பந்தத்தின் துணை வேண்டாமலே கன்மநசிப்பை யுண்டாக்கி அவைகளை யிடைவிடாத இன்பத்தி லாழ்த்தியும் வருதல் சிவபிரானது நீதிக்கடுக்குமா?

அன்றேல், அவன் ஆன்மாக்களுக்குச் சரீர பந்தத்தையுங் கொடுத்துக் கன்மத்தைத் துடைப்பானுயின் அஃதெம்மட்டி லமையும்?

---

17. சொற்றெழும்பு கொள்ளநீ சூழ்ந்ததுவு நின்செயற்கண்
மற்றவர்க ணின்றேக்கின் மாய்ந்தவுயிர்க்—குற்றங்
கொளுத்தியாங் கைய வுயர்வெண்ணெய் நல்லூர்க்
குளித்தமதுக் கொன்றையெங் கோ.

ஐய—ஆசாரிய மூர்த்தியே!
உயர்—(எல்லா வளங்களாலும்) சிறந்த
வெண்ணெய் நல்லூர்—திருவெண்ணெய் நல்லூரில் (வாழ்கின்ற
மதுக் குளித்த—தேனுல் நனைந்த [வரும்)
கொன்றை—கொன்றை மாலையை (அணிந்தவருமாகிய)
எம் கோ—பசுபதியே!
சொல்—(உம்மால்) ஏவப்படுவதாகிய

தொழும்பு—பணியை
கொள்ள—(எல்லா வான்மாக்களுமே) செய்யத்தான்
நீ—நீர்
சூழ்ந்ததுவும்—விரும்புவதும்.

(ஆனால், நீர்)

நின் நோக்கின்—உமது திருவருளில்
மாய்ந்த—வசமழிந்த
உயிர்க்கு—ஆன்மாக்களுக்கு (மட்டும்)
அங்கு—அவைகளினுள்ளத்தில்
உற்று—தங்கிப் (பிரகாசித்து)
மற்றவர்கள்—மற்ற வான்மாக்களும்
நின் செயற்கண்—உமது ஏவலிலேயே (இருக்க)
ஆங்கு—அவைகளுக்கு
ஒளித்தி—மறைந்துகொள்ளுகின்றீர்.

(அஃதேன்? சொல்லியருளுக).

பெத்த முத்தி யென்னுமிரண்டிலு மிருக்கின்ற எல்லா வான்மாக்களும் அடிமையே. சிவபிரானொருவனே யாண்டவன். ஆனால், அவன் பெத்தான்மாக்களுக்கு மறைந்தும், முத்தான்மாக்களுக்கு வெளிப்பட்டும் நிற்கின்றான். அஃதேன்?

---

18. கோலங் கொண்ட வாறுண ராதே
ஞாலங் காவல னியானெனக் கொளீஇ
பொய்யை மெய்யெனப் புகன்று வையத்
தோடாப் பூட்கை நாடி நாடா
வென்னுட் கரந்தென் பின்வந் தருளி
யென்னையுந் தன்னையு மறிவின் றியற்று
மென்னதி யானெனு மகந்தை யுங்கண்
டியாவரி யாவையு மியாங்கணுஞ் சென்று
புக்குழிப் புக்குப் பெயர்த்துழிப் பெயர்த்து
மிக்க போகம் விதியால் விளைத்திட்
டெற்பணி யாளா யெனைப்பிரி யாதே
யோடி மீள்கென வாடல் பார்த்திட்
டென்வழி நின்றன னெந்தை யன்றே
வருண்மிக வுடைமையி னருட்டுறை வந்து

பொருண்மிக வருடலும் பொய்ப்பகை யாதலுங்
கைகண்டு கொள்ளெனக் கடலுல கறிய
மெய்கண்ட தேவ னெனப்பெயர் விரீஇத்
தன்னுட் கரந்து தான்முன் னாகித்
தன்னதுந் தானுமா யென்னையின் றாக்கித்
தன்னையு மென்னையுந் தந்து தனது
செய்யா மையுமெ னதுசெய லின்மையு
மெம்மான் காட்டி யெய்த
லம்மா வெனக்கே யதிசயந் தருமே.

கோலம் கொண்ட ஆறு—சரீரமெடுத்த காரணத்தை
உணராது—அறியாமல்
ஞாலம் காவலன்—பூமிக்கரசன்
யான் என—நானே யென்று
கொளீஇ—தருக்கி,
பொய்யை—அநித்தியத்தை
மெய் என—நித்தியமென்று
புகன்று—நம்பி,
வையத்து—இவ்வுலகத்தின்பால்
ஓடாப் பூட்கை—கெடாத ஆசைப் பெருக்கை
நாடி—நினைந்து,
நாடா—(உண்மையைத்) தெளிய மாட்டாத
என்னுள்—எனக்குள்ளே
எந்தை—எனது சிவபிரான்
கரந்து—ஒளித்திருந்து,
என்பின் வந்தருளி—(அவன் நானே யென்னுமாறு) எனக்குப்பின் [னின்று,
என்னையும்—எனது பரிதாபத்தையும்,
தன்னையும்—தனது காருணியத்தையும்,
அறிவு இன்று—என்னறிவை யில்லையாக
இயற்றும்—செய்கின்ற
யான் என்னது எனும்—அகங்கார மமகாரங்களாகிய
அகந்தையும்—ஆணவத்தின் கொடுமையையும்
கண்டு—கவனித்து,
யாவர்—உயர்திணை
யாவையும்—அஃறிணைப் பிறப்புக்களிலும்,
யாங்கணும்— சுவர்க்க முதலிய வுலகங்களிலும்

சென்று—(நான்) போய்
புக்குழி—பிறக்கும்போது
புக்கு—(கூடவே) வந்து
பெயர்த்துழி—இறக்கும்போது
பெயர்த்து—(கூடவே)நீங்கி
மிக்க போகம்—பலவகைப் போகங்களையும்
விதியால்—கருமத்திற்கேற்ப
விளைத்திட்டு—புசிப்பித்து
என் பணியாள் ஆய்—எனது ஏவலாளனாய்
எனைப் பிரியாதே—என்னைவிட்டு நீங்காமல்
ஓடி மீள்கென—'நீ யிவ்வாறு பிறப்பிறப்பிற் சுழல்வாயாக' வெனச் [செலுத்தி,
ஆடல் பார்த்திட்டு—அச் சுழற்சியைப் பார்த்துக்கொண்டு
என்வழி நின்றனன்— எனது வசத்தில் நின்றான்.
எம்மான்—(அத்தகைய) என்து சிவபிரான்
அன்னோ—(கண்டார்) வியக்கத்தக்க
அருள் மிக உடைமையின்—காருணிய மிக்குளனாகலின்
கடல் உலகு அறிய—கடல் சூழ்ந்த வுலகமெல்லாம் அறியுமாறு
மெய்கண்ட தேவன் என—மெய்கண்ட தேவ ரென்னும்
பெயர் விரீஇ—திருப்பெயர் தாங்கி
அருட்டுறை—திருவெண்ணெய் நல்லூரிலுள்ள திருவருட்டுறை [யிலே
வந்து—(ஆசாரிய மூர்த்தியாக) வெளிப்பட்டு
பொருள் மிக அருள்தலும்—(எனக்கு) ஞானத்தைக் கனிவோடு [தருதலும்
(அஃது என்பால் அவனைத் தோற்றுவிப்பதோடு)
பொய்ப் பகை ஆதலும்—பிரபஞ்சத்தை மறைக்கும் பகைப்பொரு [ளாவதையும்
கை கண்டுகொள் என—'நீ நன்கு கண்டுகொள்வாயாக' வென்று [(தரிசிப்பித்தும்)
என்னை—என்னை
தன்னுள் கரந்து—தனக்கு ளடக்கி
இன்றாக்கி—தன்வசமாக்கி
தன்னதும் தானும் ஆய்—(என்மாட்டுத்) தன் ஞானமுந் தானுமே [விளங்கித் தோன்ற
தான் முன் ஆகி—(நான் அவனே யென்னுமாறு) எனக்கு முன்னி [ன்று
தன்னையும்—தன்னுண்மையும்
என்னையும்—என்னுண்மையும் (கெடாதிருப்பதை)

தந்து—தரிசிப்பித்தும்,
தனது செய்யாமையும்—தனது சுதந்திரமும்
எனது செயல் இன்மையும்—எனது பாரதந்திரமும் (கெடாதிருப்
காட்டி—தரிசிப்பித்தும் [பதை)
எய்தல்—(என்னிற்) பிரகாசித்தல்
எனக்கு—என்க்கு
அம்மா! அதிசயம்—அளவு கடந்த வியப்பை
தரும்—தருவதாகும்.

சிவபிரான் ஆன்மாக்களின் வேறாகக் காணப்படாமல் அவைகளே யென்னுமா றொற்றுமைப்பட்டு, அவைகள் பிரபஞ்ச விடயங்களிற் செல் லுமா றெல்லாஞ் செலுத்தி அவைகளின் வசமாய் நின்றுகொண்டிருப்பான். இது பெத்தான்மாக்களுக்கு அவன் உபகரிக்கு முறை.

ஆசாரியமூர்த்தியாக வந்த சிவபிரான் பக்குவான்மாக்களுக்குத் தனது திருவடி ஞானத்தைக் கொடுத்து அதன் வாயிலாகப் பிரபஞ்சத்தை முழுப் பொய்யாக்கி அவைகளின்மாட்டு விளங்கித் தோன்றுவான். தோன்றவே, ஆன்மபோதம் சிவபோதத்தி விறக்கும். ஆனால், ஆன்மா வென்னும் பொ ருள்மட்டும் அழியாது. தவிர, அந்நிலையிலும் சிவபிரானே சுதந்திரன்; ஆன் மாக்கள் பரதந்திரமே யுடையன. அப்போது அவ் வான்மாக்கள் தம்மை வேறு காணமல் அவனே யென்னுமா றொற்றுமைப்பட்டு அவன் செலுத் துமா றெல்லாஞ் சென்று அவன் வசமாய் நின்றுகொண்டிருக்கும். இது முத்தான்மாக்களுக்கு அவன் உபகரிக்கு முறை.

---

19. தருமா தருமத் தலைநின் றாழ் வேனைக்
கருமா கடல்விட முண் கண்டப்—பெருமான்
திருவெண்ணெய் நல்லூர்ச் சுவேத வனத்தா
னுருவென்ன வந்தெடுத்தா னுற்று.

தரும அதருமத் தலை நின்று—நல்வினை தீவினைகளைச் செய்து
ஆழ்வேனை—(பிறப்பிறப்பில்) அழுந்துகின்ற என்னை
கரு மா கடல் விடம்—கரிய பெரிய கடலினின்றெழுந்த (ஆலகால) [விஷத்தை
உண் கண்டப் பெருமான்—உண்டடக்கிய கண்டத்தை யுடைய [சிவபிரான்
திருவெண்ணெய் நல்லூர்—திருவெண்ணெய் நல்லூரில்
சுவேத வனத்தான் என்ன—மெய்கண்ட தேவராக
உரு உற்று—(ஆசாரிய) மூர்த்தங் கொண்டு
வந்து— (என்பால்) வந்து

எடுத்தான்-(அப்பிறவிக்கடலினின்றுந் திருவடிக்கரை) ஏற்றினன். சுவேதவனப் பெருமாளென்பது மெய்கண்ட தேவரது பிள்ளைத் திருநாமம்.

சிவபிரானே ஆசாரியனாக வந்து ஆன்மாக்களுக்கு மலநீக்கத்தையும் வீடுபேற்றையும் அருளுகின்றான்.

---

20. உற்றவர் பெற்றவ ரற்றவர் முற்று
மற்றவர்க் கற்றவ னல்லவர்க் கல்லவ
னந்த மாதி யில்லவன் வந்து
குரக்கு மனத்துக் கொடியேன் பரக்கும்
பரப்பைக் குவித்து நிறுத்திப் பிடித்திட்
டிருள்வெளி யாகு மருளினை யறுத்து
வந்து புகுதலுஞ் சென்று நீங்கலு
மின்றி யொன்றாய் நின்றவந் நிலையி
லொன்றா காம லிரண்டா காம
லொன்று மிரண்டு மின்றா காமற்
றன்னது பெருமை தாக்கா தயினு
மென்னது பெருமை யெல்லா மெய்தித்
தன்னை யெனக்குத் தருவதை யன்றியு
மென்னையு மெனக்கே தந்து தன்னது
பேரா நந்தப் பெருங்கட லதனு
ளாரா வின்ப மளித்துத் தீரா
வுள்ளும் புறம்பு மொழிவின்றி நின்ற
வள்ளன்மை காட்டி மலரடி யருளிய
மன்ன னெங்கோன் வார்புனற் பெண்ணை
வெண்ணை காவலன் மெய்கண்ட தேவ
னிண்ண லருளா லயத்த னண்ணிய
மலமுத லாயின மாய்க்கு
முலக வுயிர்க்கெல் லாமொரு கண்ணே.

உற்றவர்—உறவினர்,
பெற்றவர்—பெற்றோர்,
அற்றவர்—ஏனைய மனைவி மக்கள் (முதலிய)

முற்றும்—எல்லாப் பந்தங்களும்
அற்றவர்க்கு—நீங்கியவர்களுக்கு
அற்றவன்—வசமாகின்றவனும்,
அல்லவர்க்கு—மற்றவர்களுக்கு
அல்லவன்—வசமாகாதவனும்
அந்தம் ஆதி இல்லவன்—முடிவு முதலு மில்லாதவனும் (ஆகிய)
(சிவபிரானே)
வந்து—(ஆசாரிய மூர்த்தியாக) எழுந்தருளி
குரக்கு மனத்து—குரங்குபோலு மனத்தை யுடைய
கொடியேன்—பாவியாகிய எனது
பரக்கும் பரப்பை—விரிந்த(பிரபஞ்ச) வியாபாரத்தை
குவித்து—ஒடுக்கி,
நிறுத்தி—(என்னைத் தனது நிறைவில்) அழுத்தி,
பிடித்திட்டு—(பயிற்சி வயத்தால் மீண்டும் பிரபஞ்சத்திற் போகா
இருள் வெளி ஆகும்—கேவல சகலங்க ளாகிய [மல்) தடுத்து,
மருளினை அறுத்து—மயக்க நிலையினை நீக்கி,
வந்து—(என்னறிவில் அவன்) வந்து
புகுதலும்—கலந்து(அதனை) விளக்குதலும்,
சென்று—(நான்போய் அவனறிவிற்) கலந்து
நீங்கலும்—(மலங்களை விட்டு) விலகுதலும்
இன்றி—இல்லாமல்
ஒன்று ஆய் நின்ற—(இருவரும் அநாதியே) கலந்துநின்ற
அந் நிலையில்—அவ் வத்துவித நிலையில் (நான் அவனோடு)
ஒன்று ஆகாமல்—அபேதமு மாகாமல்
இரண்டு ஆகாமல்—பேதமு மாகாமல்
ஒன்றும் இரண்டும்—அபேதமும் பேதமும்
இன்று ஆகாமல்—இல்லை யென்பது மாகாமல் (நிற்க),
தன்னது பெருமை—(பஞ்ச கிருத்திய மாகிய) தனது உரிமையில்
தாக்கான் ஆயினும்—(சிறிதும்) கெடாதவனாயினும்
என்னது பெருமை எல்லாம்—எனது இயல்பெல்லாவற்றையும்
எய்தி—தன்வண்ண மாக்கி,
தன்னை—தனது எண்குணங்களையும்
எனக்கு—என்மாட்டு
தருவதை அன்றியும்—பதிய வைப்ப தல்லாமலும்
என்னையும்—எனது அனுபவ வுரிமையையும்
எனக்கே—எனக்கே

தந்து—கொடுத்து,
தன்னது—தனது
பேர் ஆநந்தப் பெருங் கடலதனுள்—பேரின்பப் பெருங்கடலினின்றும்
ஆரா இன்பம்—தெவிட்டாத வின்பத்தை
அளித்து—நுகர்வித்து,
தீரா—இடையீடில்லாமல்
உள்ளும் புறம்பும்—(எனது)அகத்திலும் புறத்திலும்
ஒழிவு இன்றி—வியாபித்து
நின்ற—நிற்கின்ற
வள்ளன்மை—(தனது) காருணியத்தை
காட்டி—(எனக்குத்) தரிசிப்பித்து,
மலர் அடி—முத்தியை
அருளிய—கொடுத்தருளிய
மன்னன்—சர்வலோக நாயகன்,
எம் கோன்—சர்வான்ம நாயகன்,
வார் புனல்—இடைவிடா தோடுகின்ற வெள்ளத்தையுடைய
பெண்ணை—பெண்ணையாறு (சூழ்ந்த)
வெண்ணை—திருவெண்ணெய் நல்லூரில் (வந்த)
காவலன்—சர்வஞான நாயகன்,
மெய்கண்ட தேவன்—மெய்கண்ட நாதன்,
அண்ணல்—பெருமான்,
அருள் ஆலயத்தன்—அருளுக்கு இருப்பிடமாக விருப்பவன்,
உலக உயிர்க்கு எல்லாம்—சர்வான்மாக்களுக்கும்
நண்ணிய—(பந்தமாய்) வந்த
மலம் முதலாயின—ஆணவ முதலியவற்றை
மாய்க்கும்—நீக்கி (ச்சுகத்தை) யருளுகின்ற
ஒரு கண்—ஒப்பற்ற ஞானனந்த சொரூபன்.

சிவத்துக்கும் ஆன்மாவுக்கு முள்ள கலப்பு இடையில் நிகழ்வதன்று. அஃதென்றுமே யுள்ளது.

அக் கலப்பு பேதமுமன்று; அபேதமுமன்று; பேதாபேதமு மன்று. இம் மூன்றுந் தன் கட்டோன்ற இவற்றிற்கு வேறாயிருப்பதே அது. அதுவே சைவ சித்தாந்தத்திற் கூறப்படும் அத்துவிதம் ஆகும்.

பேதமாவது விரலும் விரலுஞ் சேர்ந்தாற் போன்ற சையோகம்.

அபேதமாவது குடாகாயமும் மகாகாயமுஞ் சேர்ந்தாற் போன்ற ஐக்கியம்.

பேதாபேதமாவது பழமுஞ்சுவையும் சேர்ந்தாற் போன்ற தாதான்மியம்.

சிவ... ன் ஆசாரியமூர்த்தியாக வந்து செய்யும் அநுக்கிரகத்தினாலே பக்குவான்மா தனக்குப் பகையாகிய பிரபஞ்சத்தை யொதுக்கி உறவாகிய அவனோடு கலக்கும். அவன் தனது எண்குணங்களையும் அதன்மாட்டுப் பதியவைத்து, அதன் குணத்தை யெல்லாம் அவ்வெண்குணத்து ளகப்படுத்தி யடக்குவான். அவ் விதமாக ஆன்மாவின்மாட்டுச் சிவ பிரானது எண்குணங்களும் விளங்குவதே முத்தி அல்லது பேரின்ப மெனப்படும். அவ்வான்மா தானுஞ் சிவமேயாய் அவனோடு ஒற்றித்து நின்று அவ்வெண் குணங்களையும் அழுந்தி யறியும். அவ்வாறழுந்தி யறிவதே பேரின்ப நுகர்ச்சி யெனப்படும்.

முத்தியில் ஆன்மா சிவமேயாயினுஞ் சிவபிரானுக்குரிய பஞ்சகிருத்தியத்தைமட்டும் அது செய்வதில்லை. ஆகலின், ஆண்டும் ஆன்மா அடிமையே; சிவபிரானே ஆண்டவன்.

திருச்சிற்றம்பலம்.

---

இருபா விருபஃது உரையுடன் முற்றிற்று.

ஸ்ரீ மெய்கண்ட சிவந் திருவடி வாழ்க.
ஸ்ரீ அருணந்திசிவந் திருவடிவாழ்க.

# பிழை திருத்தம்.

TANJORE

340

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 1 | 20 | ஸ்ரீனிவாசாரியர் | ஸ்ரீனிவாஸாசாரியர் |
| 3 | 8 | பிராத்திக்கப்பட்ட | பிரார்த்திக்கப்பட்ட |
| 5 | 11 | யிஸ்தாரமாக | விஸ்தாரமாக |
| 6 | 2 | तत्वमस | तत्वमसि |
| 9 | 3 | सामासीनं | समासीनं |
| ,, | 17 | அவை கனினால் | அவைகளினால் |
| ,, | 23 | உபநிஷ்தது | உபநிஷத்து |
| 12 | 3 | மற்றொறுவன் | மற்றொருவன் |
| 14 | 7 | காமமஸ்வரூப | காமஸ்வரூப |
| ,, | 8 | பரத்தந்திரமு ம | பாதந்திரமும் |
| ,, | 22 | உபநிகிஷத்தில் | உபநிஷத்தில் |
| 16 | 1 | துவம் | த்வம் |
| 20 | 5 | பரம்ஹா | ப்ரம்ஹ |
| ,, | 13 | விருத்தியினால் | வ்ருத்தியினால் |
| 21 | 11 | பரம்ஹாஸ்மி | ப்ரம்ஹாஸ்மி |
| ,, | ,, | அறிநதான் | அறிந்தான் |
| ,, | 14 | யிருக்கிர | யிருக்கிற |
| 23 | 14 | செற்படி | சொற்படி |
| 26 | 23 | ஈசவர | ஈச்வர |
| 29 | 19 | ரிக்கை | ரிகை |
| 30 | 28 | ஆசார்ய | ஆசார்ய |
| 31 | 10 | ஆசார்ப | ஆசார்ய |
| 38 | 16 | பாருன | மாருன |
| 38 | 17 | பூராண | புராண |

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 40 | 19 | போட்டிருக்கிரதாக | போட்டிருக்கிறதாக |
| ,, | 26 | பாடாந்திரங்கனை | பாடாந்திரங்களை |
| 41 | 2 | பாடங்களேடு | பாடங்களோடு |
| 41 | 26 | பொத்தமத | பௌத்தமத |
| 42 | 4 | त्रिष्णुना | विष्णुना |
| 42 | 12 | मसत्प्राक्तं | मसत्प्रोक्तं |
| 44 | 1 | என்றும் | என்னும் |
| 45 | 2 | புஸதகங்களை | புஸ்தகங்களை |
| 47 | 6 | ஸ்வகதமேத | ஸ்வகதபேத |
| 52 | 13 | तथ्यर्शिनः | तथ्यदर्शिनः |
| 52 | 21 | யகிறிவனுக்கு | அறிகிறவனுக்கு |
| 53 | 22 | பெருள் | பொருள் |
| 55 | 15 | பரம்ஹம் | ப்ரம்ஹம் |
| 57 | 13 | அஞானம் | அஞ்ஞானம் |
| ,, | 16 | ,, | ,, |
| 58 | 10 | ,, | ,, |
| 59 | 7 | விட்டின் | வீட்டின் |
| ,, | 19 | மென்புவதுமில்லை | மென்பதுமில்லை |
| ,, | 26 | செல்லமுடியாது | சொல்லமுடியாது |
| 60 | 19 | பரம்ஹா | ப்ரம்ஹா |
| 63 | 2 | சம்சய தெசெயிலும் | சம்சய தசையிலும் |